Registered No. M. 2385.

உ

முருகன் துணை

விவேகபாநு

ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

“தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு”—திருக்குறள்.

ஆசிரியன்:—எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை

“தன்மை [illegible]டைப் பிடி” “நாடொப்பன செய்” “உத்தமனாயிரு”

மாலை—௪. விபவ ௵ கார்த்திகை ௴
1928 ௵ நவம்பர், டிசம்பர் ௴ மலர்—௭.

கடவுள் வணக்கம்

நிலையுறு நிராசையா முயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம் புதல்வனும்
நெறிபெறு முதாரகுண மென்னுநற் பொருளுமருள்
நீக்குமறி வாந்துணை வனும்
மலைவறு நிராங்கார நண்பனுஞ் சுத்தமுறு
மனமென்னு நல்கே வலும்
வருசகல கேவல மிலாதவீட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வரு ளுவாய்!
அலையிலாச் சிவஞான வாரியே! யானந்த
வமுதமே! குமுதமலர் வாய்
அணிகொள்பொற் கொடிபசுக் கொடியிரு புறம்படர்ந்
தழகுபெற! வருபொன் மலையே
தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணிவே!.

முருகர்த் தியானம்

ஆம்பூர், தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமான்

எம். எல். வீரராகவ தாதாசாரியர் அவர்கள்

எழுதுவது

கந்தவரை வைகும் கதிர்வேல் முருகா!
வந்தனன் இவண் என்னைக் காப்பாய் முருகா!
புல்லிது புல்லிது எனஉரை பகன்ற முருகா!
வல்லியர் தொழ வரமருளியவா முருகா! 1

காங்கேய னெனப் பெயர்பூண்ட திருமுருகா!
திங்காய முடைய வள்ளிதனைப் புணர்ந்த முருகா!
தினைப்புனத்தில் வாழ்த்திய திருத்தணிகை முருகா!
உனைப்பிரிந் தால்வேறு துணையுண்டோ சொல்முருகா! 2

பிறைமுடி இறையெனப் போர்த்தும் வேல்முருகா!
முறைப்பது முடிக்க திருவள்ளியேத்தும் வேல்முருகா!
கொத்தான பாபங்களைத் தீர்த்தமெய் முருகா!
சத்தாகி முத்திக்கு வித்தாகிநின்ற வென்முருகா! 3

அக்கிரமந் தனைத் துலைக்கவந்த முருகா!
கிரவுஞ்சம் என்னும்மலையைப் பொடியாக்கும் வேல்முருகா!
'அஞ்சொலீர்' எனக்கூறி அபயமளித்த திருமுருகா!
இன்சொலால் வேண்டியே காத்தருளிய வேல்முருகா! 4

பின்தொடரும்.

நமது "விவேகபாநு"வுக்கு இதுவரை சந்தாநேயர்கள் ரூபாய் அநுப்பாதிருக்கும் அன்பர்கள் 1929-ம் வருடம் பிப்ரவரி மீ 10உ-க்கு (விபவஹு தைமீ 29உ) க்குள் அனுப்பிவைக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

காலஞ்சென்ற லாலா லஜபதிராய்

அந்தோ! பாரத மக்காள்!

நமது பாஞ்சால நாட்டிற் றிலகம்போல் விளங்கிய முடி சூடா மன்னரும், உண்மைத் தேசபக்தரும், உடல் பொருள், ஆவி மூன்றினையும் உலகத்துக்கே அர்ப்பணம் செய்த தியாகமூர்த்தியும், பிராமணரல்லாத பெருங் கிழவரும், அஞ்சா நெஞ்சம் படைத்த வீரருமாகிய **ஸ்ரீயுத-லாலாலஜபதிராய்** அவர்கள்லாகூரில் தமது ஜாகையில் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார் என்றுகேட்டு நாம் மிகவும்வருந்துகின்றோம்.

சென்ற சில நூற்றாண்டுகளாக அடிமை யென்னும் படுகுழியிற் ...க்குண்டு கறை யேற துறை தெரியாது புலம்பி பரதவிக்கும் பாரத ...க்களின் துயரை யகற்ற, அவதார புருடர்களாக, சுதந்திரவீரர்க ...ாகத் தோன்றிய தேசபக்தர்களிலே ஸ்ரீஜத் பால கங்காதர திலகரை ...ம், தாதாபாய் நௌரோஜி முதலியவர்களையும் ஒத்த சிறந்த உத்தம ...தசபக்தர் லாலாஜீயைத் தவிரப் பிறரில்லை யெனலாம்.

லாலாஜீ தாம் பிறந்த நாட்டில் சிறந்த வழக்கறிஞராக (Vakil) ...ருந்து நற்பெயரெடுத்து நிரம்பப் பொருளீட்டினாராயினும், அச்செல ...த்தையும், செல்வாக்கையும், ஏழை மக்களின் கஷ்டத்தைப் போக்கு ...கிலும், அவர்களை கைதூக்கி விடுவதிலும் முன்னின்று உபயோகப் ...த்தி வந்தார். மேலும், இந்தியாவின்கண் பரவியுள்ள ஜாதி யிறுமாப் ...யும், சமயப் பூசல்களையும் ஒழித்து, மக்கள்களுக்குள் சமத்துவத் ...தயும், சகோதரவாஞ்சையையும், அன்பையும் வளர்ப்பதற்காக அல்லும் ...லும் அரும்பாடுபட்டார்.

நமது லாலாஜீ 1865-ல் பிறந்தார். 1877-முதல் சுவாமி தயா...ந்த சரஸ்வதியைப் பின் பற்றியிருந்தார். லாகூர் சர்க்கார் கலாசாலை...ல் கல்வி கற்றார். 1885-ல் சட்டப் பரீட்சையிற்றேறி வக்கீல்தொழில்

புரிந்தார். 1886-ல் ஆரிய சமாஜத்தை நாட்டில் பரவச் செய்தார். 1888-ல் லாகூரிலே ஸ்திரமாக வசித்து வாசித்து வக்கீல் உத்தியோகத்தில் தேற்சிபெற்றார். 1897-ல் உண்டான பஞ்சத்தில் 2000-அனாதைக் குழந்தைகள் மரணமடைவதைத் தடுத்தார். 1901-ல் பஞ்சக் கமிஷன் முன் சாட்சி கூறினார். 1905-ல் காங்கிரா பூகம்பக் கஷ்ட நிவாரண வேலையைப் பூரணமாய்ச் செய்துவிட்டு, பிரிட்டிஷ் அதிகாரத்தினால் இந்தியமக்கள் படும் பாடுகளைப்பற்றி பிரிட்டிஷ் ஜனங்கட்கு எடுத்துச் சொல்ல கோகலேயுடன் இங்கிலாந்துக்குச் சென்றார். ஐரோப்பா, அமெரிக்கா யாவும் பார்த்து வந்தார். 1907-ல் கவர்மெண்டு அடக்கு முறைகளைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்ததால் அதிகார வர்க்கத்தினரால் நாடு கடத்தப்பட்டார். பர்மாவிலே மாண்டலேயில் வைக்க அவண் பதிந்தார். பிறகு அமெரிக்காப் போய்ச் சேர்ந்தார். 1920-ல் மீண்டும் பாரதநாட்டுக்கு வந்தார். மகாத்மா காந்தியு[illegible]ன் ஒத்துழையா இயக்கத்திற் கலந்துழைத்து ஆறுமாதம் சிறைச்சாலை சென்றார். பின்னர் "பீபிள்" என்னும் வாரப்பத்திரிகையை நடாத்தத் தொடங்கினர். இறுதியாகக் 1928-ல் உயிர் துறந்தார். உயிர் துறக்கும் போது அவருக்கு வயது 66. இவரது கபடமற்ற நெஞ்சத்தையும், கருணையுள்ள தயாள குணத்தையும், சிறந்த தேசபக்தியையும், வீரம் பொருந்திய வார்த்தைகளையும், விவேகம் நிறைந்து ததும்பும்பிரசங்க[illegible]த்தையும், ஹே! பாரதமக்காள்! இனி என்று காண்போம்! கேட்போ[illegible] அந்தோ! லாலாஜீ! நினது உயிர்போனதென்று கேட்டு உலக மக்க[illegible] பதறிய சம்பவத்தை என்னென்றெழுதுவது என்று எமக்கு விளங்[illegible] வில்லை! "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென் றெண்ணவே[illegible] திடமில்லை" என்றனர் ஆன்றோர். அவ்வண்ணமே நேற்றிருந்தாய் இ[illegible] றிறந்தாய்போலு மிருக்கின்றது நினது சம்பவம்.

நம் பரதநாட்டின் விடுதலைப்போரின் முன்னணியில் நின்ற த[illegible] எங்கள் அடிமை வாழ்வை யகற்றுவாயென்றிருந்த எண்ணமெல்ல[illegible] பாழாய்ப் போயின! அந்தோ! லாலாஜீ! நீவிர் எடுத்துக்கொண்[illegible] அரியபெரிய தேசவிடுதலைத்தொண்டு முற்றுப்பெற்றதென்று இப்[illegible] வுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றீர் போலும்!

எல்லாம் வல்ல இறைவ! எங்கள் பாஞ்சால நாட்டின் திய[illegible] மூர்த்தி லாலாலஜபதி அவர்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்[illegible] றோம்.

திருவருட்சகா[illegible]

:: சிரிக்கும் தீர்மானங்கள் ::

இப்போது, நம் இந்து மாது சிரோமணிகள் தலையில் கிராப் வைத்து முன்பக்கம் மயிர்களைப் பலவிதமாகவெட்டி அற்புத வளைவுகளாகச் செய்து விடுவதும், மஞ்சளை அகற்றிவிட்டு வெள்ளைப்பொடிகளை முகத்தில் ஒத்திக்கொள்வதும், மேனாட்டு நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டு இருப்பதும், சுயேச்சையாகத் தனியே வெளியேறித் திரிவதும் தற்கால நாகரீகத்திற்கு மிகவும் திருப்திகரமா யிருக்கின்றன. இனி, அவர்களுக்கு மீசையுண்டாகும்படி உபயோகிக்கத் தக்க ஒரு மருந்தைக் கண்டு பிடித்துக்கொடுத்து மீசையையும் வளர்க்கும்படி செய்துவிட்டால் இன்னம் நாகரீகம் மெத்த அழகாயிருக்கும் என்று நவீன நாகரீகக் கமிட்டியார் ஒரு தீர்மானம்செய்திருக்கிறார்களாம்.

* * *

தென்னிந்தியா ரெயில் வண்டிகளில் இப்போது மூச்சுவிட முடியாதபடி ஜனக்கூட்டம் அதிகமாக ஏறி நெருக்கினபோதிலும் எங்களுக்கு உடம்பில் சரியாக வேர்வை வெளிப்பட்டுத் தினவு தீரவில்லை. ஆதலால், தினந்தோறும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஒவ்வொரு டிராமா நடக்கும்படி செய்துவிட்டால் இன்னும் கூட்டம் அதிகரித்து எங்கள் உடம்புத் திமிர்தீருமென்று செறுக்கடிக் கமிட்டியார் ஒரு தீர்மானஞ்செய்து ரெயில்வே அதிகாரிகளுக்கு ஒரு மனுச்செய்துக்கொண்டிருக்கிறார்களாம்.

* * *

நாடகமேடைகளில் புதிய நாகரீகத்தின்படி ஆக்ட்செய்யும் ஆக்டர்களில் பெரும்பான்மையான உயர்ந்த ஆக்டர்கள் சுருதியையும், தாளத்தையும், விட்டு விட்டுப் பாடுவது நாகரீகர் காதுகளுக்கு தேனைப் போல் இனிமையாயிருக்கின்றது. ஆயினும், இன்னும் இந்தச் சங்கீதத்தின் இனிமையை அதிகப்படுத்துவதற்கு ஐந்தாறு குண்டுக் கழுதைகளுக்கு நாடக உடையணிந்து, அவற்றை ஸ்டேஜில் நிறுத்தி அவற்றின் காதில் பெரிய எறும்புகளைக் கடிக்கவிட்டுக் கதறும்படி செய்தால், பரமானந்தமா யிருக்குமென்று பூஜ்ஜிய சங்கீத நாகரீகக் கமிட்டியார் தீர்மானஞ் செய்து, வண்ணார்களிடம் ஆகாரமின்றிப் பாரந்தாங்கிக் கஷ்டப்படும் கழுதைகளைவந்து ஆஜராகும்படி அவற்றிற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களாம்.

* * *

தற்கால நாகரீகத்தையொட்டி மங்கைப் பருவமுள்ள அழகிய பெண்மணிகள் பாகவதர்களாக வெளியேறி உயர்ந்த நாகரீகப் படிப்பாளர்கட்கு நடுவில் நின்று காலக்ஷேபம் செய்வதால் நாகரீக அந்தரங்க பக்தி ஆடவர்கட்கெல்லாம் ததும்பி வழிகின்றது மிகவும் திருப்திகரமா

யிருக்கிறது. இன்னும் இந்த பக்தி மிகுந்து பரமானந்த நிலையை அடையவேண்டுமானால், 'இந்தக் கதாப்பிரசங்கங்களை ஆங்கில பாஷையில் செய்யும்படி அந்த பக்தாமிர்த பெண்ணிரத்தினங்களைப் பழக்கி விடவேண்டுமென்று நவீன கதாகாலக்ஷேப ஸொஸைட்டியார் தீர்மானஞ் செய்திருக்கிறார்களாம்.

வி த்திரநாதன்.

தமிழ்த்தாய் வணக்கம்

சென்னை, வண்ணாரப்பேட்டை, ஸ்ரீநடராஜ சபை,

பண்டிதர்-எம். ராஜமாணிக்கம் எழுதுவது

கும்மி

ஓங்குந் திருப்பதி நேர்வடக்கில் வாழும்
உயரும் வங்கக்கடல் நேர்கிழக்கில்
பாங்குடன் மேற்கினில் சீர்மலை யாளமும்
பகர்ந்திடுந் தெற்கினில் கன்னிமுனை. 1

எல்லைக ளாமிந்த நான்கை யமைத்துமே
யேந்திழையே நீயுமுலாவு கின்றாய்!
தொல்லை விலக்கியே எல்லைக்குள் ளாடிடும்
தேவி! உனக்கு நமஸ்காரம். 2

பல்லாயிர வருடங் களுக்கு முன்னர்
பரதகண் டத்திலே நீபிறந்தாய்!
எல்லாம் வல்லவள் நீயே செந்தமிழ்
இறைவி! உனக்கு நமஸ்காரம். 3

மன்னர் மடியினில் மகிழ்ந்து விளையாடி
மங்கள மாகவே தானிருந்தாய்!
சொன்னயம் வாய்ந்தசொ குசுள்ள செந்தமிழ்ச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 4.

பாவலர் போற்றிடுஞ் செந்தமி ழணங்காய்!
பாரினி லுற்ற புலவோரின்
நாவினில் நின்று நடனம் புரிதமிழ்
நங்காய்! உனக்கு நமஸ்காரம், 5

நீதிமஞ்சரி

சு. கு. கோவிந்தசாமி பிள்ளை
(பதிப்புரிமை ஆசிரியரும்)

(மாலை-1. மலர்-2: பக்கம் முன்தொடர்ச்சி.)

10. நன்றி மறவாமை

ஒருவர் செய்த நன்றியை மறந்து அவர்கட்கு இன்னல் விளைவிப்பதும், கேடு நினைப்பதும் நன்றன்று. மேலும் ஒரு காலத்தில் நன்றி செய்தவர்கள், ஒரு காலத்தில் தீங்கிழைக்கலாம். அக்காலத்தும் அவர்களால் முன் செய்யப்பட்ட நன்றியை மறந்தேனும் பின்செய்த தீங்கிற்காக சினங்கொண்டு பதிலிடையூறு செய்தல் புத்திமான்கட்கேற்ற ஒழுங்கல்ல. ஒரு நன்றி செய்தவர்கள் பின்னர் எத்துணை தீங்கிழைப்பினும், முன்னர்செய்த ஒரு நன்றியறிதலை மனத்திலிருத்தி செய்யும் பிழைகளனைத்தும் பொறுத்துக்கொள்வது அறிவுடையோர் செய்கையென்று கூறும் வேதவாக்கியத்தை கைக்கொள்ளல் வேண்டும்.

11. பகையாமை

ஒருவருக்கொருவர் பகைமை யுண்டுபண்ணிக்கொள்ளா திருத்தலே சிறந்ததாம். இங்ஙனம், அன்னியரிடத்தில் பகைமை யுண்டுபண்ணிக் கொள்ளுதல் சிறந்த வாழ்க்கை இன்பத்தைத் தராது. இது எப்பொழுதும் துன்பத்தையும், மனக்கிலேசத்தையும் உண்டுபண்ணும் தன்மையுடையது. ஆகலான், பகைமையை விட்டொழித்து ஒருவருக்கொருவர் தீரா நட்புகொண்டிருத்தல் வேண்டும். தவிர முக்கியமாக இவர்களிடத்து பகைத்துக்கொள்ளுதல் எஞ்ஞான்றும் மிக மிக துன்பத்தைத் தரும். அதாவது அரசாங்கம், புலவர், மாந்திரீகன், குரு முதலியவர்களை பகைத்து வாழ்தலரிதாம்.

12. அறிவில்லார் தன்மை

மக்களாய்ப் பிறந்தார் கல்வி யறிவில்லா திருத்தல் மரத்திற்குச் சமமாவரென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர அறிவாகிய ஞானமில்லாதவன் சொல்லும், செயலும் இகழத்தக்கனவாம். அறிவில்லான் அறிவுடையோர்க் குழுமிய சபையிலிருப்பின் நாயிருந்தவாறாம். அன்றியும் அறிவுடையோர் சபையில் அறிவில்லான் பேசுவதும் நாய் குரைப்பது போலாம். ஆதலால் யாவரும் அறிவாகிய ஞானத்தைப் பெறல்வேண்டும்.

(வளரும்)

வர்த்தகப்பகுதி

(எஸ். கே. கோ.)

1. வர்த்தகத்தின் சிறப்பு

வர்த்தகாபிமானிகாள்!

உலகத்திலே 'வர்த்தகம்' மிகச் சிறந்ததொழில். வர்த்தகத்தினுலேயே மேனுட்டு ஆங்கிலேயர் முப்பத்து மூன்று கோடி ஜனங்களடங்கிய நம்மிந்தியாவை ஆட்சிபுரிகின்ருர்களென்பதை அதிக மெடுத்துரைக்கத் தேவை யில்லை. ஆதலின் வர்த்தகத்தின் சிறப்பை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுத்தனம்.

2. வர்த்தகரொழுக்கம்

வர்த்தகர் நன்னடை, நாணயப் பொறுப்பு, நல்லபிமானம், ஆட்களிடத்தன்பு, இனியமொழி, தன்னைப்போல் பிறரையும் மதித்தல், உலகானுபவம் முதலியவற்றி லீடுபட்டொழுகல்வேண்டும்.

3. வர்த்தகப் பழக்கம்

வர்த்தகஞ் செய்வதற்கு அதிகமான மதிவேண்டும். 'மதியில்லா வாணிபம் விழலுக்குச் சமானம்' என்று பெரியாருரைத்திருக்கின்றனர். ஆகையால் வர்த்தகஞ் செய்ய விரும்புமுன்னர், பன்னெடுங் காலமாய் வர்த்தகத்திற் பழகி யனுபோகமுள்ள பிரபல வர்த்தக சிகாமணிகளிடத் தமர்ந்து வர்த்தகமுறைகளைச் செவ்வனே யுணரல் வேண்டும்.

4. வர்த்தக ரொற்றுமை

வர்த்தகர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு தொழில் புரிவதால், தங்கள் பொருளே விரையமாகுமன்றி வியாபாரத்தில் ஆதாயமில்லாமற் போகும். ஆகவே வர்த்தகர்கள் ஒற்றுமையென்னும் ஆபரணத்தை அணிதல் வேண்டும்.

5. வர்த்தகத்தில் கடன்

சில வர்த்தகர்கள் 'கடன்' வாங்குவதே யில்லாது கைப்பொருள் வைத்தே வியாபாரஞ் செய்பவர்களுமுண்டு. அவர்களைப்பற்றி இங்கு நாம் கூறவில்லை. சிற்சில வர்த்தகர்கள் வியாபாரத்தின் நிமித்தம் ஏராளமாகக் கடன் வாங்குவதுண்டு. அவர்கள் சொல்லுறுதி வழுவாது நடந்துகொள்ளல் வேண்டும். கடன் கொடுத்தவர் வந்து கேட்கும்போது முகம் கடுகடுத்துரைப்பதும், அவர்களுடன் சினங்கொண்டு சண்டைசச்சரவு செய்து கொள்வதும், வர்த்தகர்கட்கேற்ற ஒழுங்கல்ல. வர்த்தகர்களே! கடன்கொடுத்தவர் வந்து பணத்தைக் கேட்கும் போது கொடுத்த பணத்தைத்தானே வந்து கேட்கின்ருர்கள்.

(இன்னும்வரும்)

செல்வ நிலையாமை

ஆம்பூர் மிஸெளரி, மிஷியோன் கலாசாலை,

தமிழ்ப் பண்டிதர்,

ஸ்ரீமான் எம் எல். வீரராகவதாதாசாரியர் எழுதுவது

செல்வம் என்ற பதத்திலிருந்து 'செல்வோம்' என்ற பொருள் அறியப்படுகிறது. அதாவது, அஃது உலகமாந்தரிடை ஸ்திரமாக நிலைத்திராதென்பதே. அத்தகைய செல்வம் நம்மவர்க்குக் கிடைத்தபோது நாம் அதைச் சன்மார்க்கத்தில் செலவழித்து தருமங்கள் பலவியற்றி **அறம், பொருள், இன்பம், வீடு** என்பவற்றுள், பெறுதற்கெட்டாப்பேரின்ப வீட்டை யடையயதோர் வழியைத் தேடிக்கொள்ளுதலே சாலச் சிறந்ததாம். ஆதலாற்றான் நாலடியாரிலும் அறத்துப்பாலை முதலில் எடுத்துக்கொண்டு அதிலும் செல்வ நிலையாமையை முதன் முதலில் கூறியுள்ளார்.

மானிடர் எல்லாரும் பணத்தைப் பலவழியில் ஈட்டக்கருதியுள்ளோரே தவிர, அதை நல்வழியில் செலவழித்து நற்கதியடையும் வழியை நினைத்தார் சிலரே யாவர். அதனால் அடியேன் 'செல்வ நிலையாமையை, முதலில் எழுத வாரம்பித்ததின்காரணம் யாதெனில், செல்வத்தைப் பெற்றோர் தருமம் செய்வதில் இனிமேலாவது கருத்துடையார்களாதல் வேண்டுமென்பதற்கே. மற்றும் நமக்கு முதலில் முடியாதனவற்றை யுணர்ந்தாலன்றி முடிபவற்றுள் கருத்துண்டாகாது. அறுசுவை யுண்டியை அன்புடனே இல்லற தருமத்தை செவ்வனே யுணர்ந்த இல்லாள் தனது கொழுநனுக்கு இலைபொலி கலங்களிலிட்டு உண்பிக்கச்செய்து சந்தோஷித்திருந்த பெருஞ் செல்வமுடையோரும் தங்களுக்குக் கலிவந்தக்காலத்துப் பெண்சாதி பிள்ளைகளைத் தோற்று நிலைகுலைந்து அல்லற்படுவதை நாம் இக்காலத்தில் கண்கூடாகக் காண்கிறோம்.

'செல்வம் சகடக்கால் போலவரும்' என்பதனாலே நாம் செல்வத்தின் நிலையாமையை யறிந்து அதன்கண்ணுள்ள பற்றை விட்டுப் பல்

லோங்கிந்து உண்ணுதல் வேண்டும். இவ்விடை நமது ஞாபகத்திற்குத் தெய்வத்தன்மை வாய்ந்த திருவள்ளுவர் கூறியதான

"அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றால்
அற்குப வாங்கே செயல்"

என்ற விடயத்தைக் கொண்டுவந்தால் மேற்கூறியதன் உண்மை இனிது விளங்கும். செல்வத்தையுடையோர் பலவிதத் துன்பங்களுக்குள்ளாகின்றனர்.

அத்தகைய துன்பங்களைப் பயக்கும் பொருளை அறிவுடையோர் ஒரு பொருட்படுத்தார். ஏனெனில், அவர்கள் மானிடர்களாகிய நாம் பொருளை அருமையாய்த் தேடிப் பெருமையாய்ப் பெற்று வெகு திறமையாய்ப் பாதுகாத்து வரும்பொழுது நெருப்பினுலோ, நீரினுலோ, முடிமன்னர்களது வல்லமையினுலோ, நம்மிடத்திலிருந்து கவர்ந்து செல்லப்படுவதினுலோ, எப்பொழுது தருணம் வாய்க்குமெனப் பதுங்கிக்காத்திருக்கும் பகைவர்கள் புடைத்துப் பிடுங்குவதினுலோ, இப்பொருள் அவர்களிடம் நிலைபெற்றிராது. அஃது மனதிற் சங்கடத்தை விடாது கொடுத்துக் கொண்டு வருமென்பதை நன்குணர்ந்துதான்

"ஈண்ட லரிதாய் கெடுத லெளிதாகி
நாண்டல் சிறிதாய் நடுக்கும் பல்தருஉம்
மாண்பி னியற்கை மருவிலரும் பொருளை
வேண்டா தொழிந்தார் விறலோ விழுமிதே"

என அறிவுடையோரால் கூறப்பட்டிருக்கிறது. பலவகையான தீங்குகளைத் தருவதாகிய செல்வத்தை வருந்திப் பிறர்க்குப் பயன்படாது சேர்த்து வைத்தல் கூடாது. மற்றும்,

"* * * *
தீதுற்ற செல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே"

என்ற அமுதமொழியினின்றும் நாம் இத்துணைக் கேவலமான செல்வத்தைப்பற்றி நினைத்தலே கெடுதலாகும். நம்முடைய வாழ்நாட்கள் தினமும் தேய்பிறையேபோல் கழிந்து போகின்றன. அதற்குள் நாம் கொஞ்சம் தானதருமங்களை இயற்றி நற்கதியடைய வழிதேடலவசியமன்றோ? இதைப்பற்றி! அறநெறிச். சாரத்திலும்,

"காலைச் செய்வோமென்று அறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச் செய்வாரே தலைப்படுவர்—மாலைக்
கிடந்தான் எழுந்தவரிதான் மற்றென்கொல்!
அறங்காலைச் செய்த வாறு"

என வெழுதப்பட்டுளது. நாம் பல தீவினைகளியற்றிக் கடையில் நரக வாயிலை யடையுங்காலையில் எப்பொழுதாயினும் நமக்கு அறியாது ஒரு தருமம் செய்திருப்போமாயின் அதன் பயனாக அந்த நரகத்தினின்றும் தப்பிச் சுவர்க்கமடைவோம் என்றால், பலதனிகர்கள் தானத்தின் பெருமையினைச் கிஞ்சித்தேனுமறியாது தங்கள் வாழ்நாட்களை வீணுட்களாக கழிக்குமவர்களின் மடமைதானென்னே! என்னே!!

சென்ற நாளை சிறு விரல் வைத்து எண்ணலாம். நின்றநாள் யார்க்கும் உணர்வரிதாதலாம். நாம் விரைவில் சிரமத்தைக் கருதாது தருமத்தைச் செய்து நாம் புவியின்கண் பிறந்ததின் பயனாக கருமத்தை இனிது முடித்துக்கொளல் வேண்டும்.

மற்றும் பகலவனது வருகையை யளவுகோலாகக் கொண்டு நமது இறப்பையே எதிர் பார்த்துக் காத்திருக்கும் கூற்றுவனையும் பயப்படாது தப்பும் ஆற்றலை அறத்தினா லடையலாம். "அருளிலார்க்கு அவ்வுலகமில்லை" என்பதனால் அறத்தைச் செய்து அருளுடையீராக வேண்டும். பெருஞ் செல்வத்தைப் படைத்த பெரியோர் யாமென அறவும் அகங்கரிக்கும் மானிடர்கள் தங்களது செல்வம், நள்ளிருளில் பெருங் கங்குலி லிருந்து வெளிப்படும் மின்னலே போல் சிறிது நேரம் தோன்றி இருந்தவிடம் தெரியாம லழிந்துபோம் என்பதைக் கனமும் கருதாது வாழ்கின்றனர். அவர்களது செல்வத்தின் நிலை நீர்மேல் குமிழிற்குச் சமானமேயாகும். தானதருமங்களின்றிப் பணத்தைக் கூட்டிப் பேழையில் போட்டு வைப்போர் எளிதில் ஏழைகளாதல் இயல்பன்றோ? 'ஈயார் தேட்டை தீயார் கொள்வர்' எப்படி பல தேனீக்கள் பல பூக்களினின்றும் தேனைக்கொண்டுபோய் மென்மேலும் சேர்த்து வைக்கும்போது திடீரென வேடர்கள் அதையபகரித்துப்போய் விடுகின்றனரோ அதைபோல் நம்முடைய செல்வமுமே! நாம் உதாரணமாக இப்போது பச்சையப்ப வள்ளல், ஜே. என். டாடா முதலியவர்களது வள்ளற் றன்மையைப் படித்தும் கேட்டும் இருக்கிறோம். இப்பேர்ப்பட்ட பெரியோர்கள் பூவுலகிலிருந்து பலதருமங்க ளியற்றியதனாற்றான் பஞ்ச மென்பது அஞ்சிநின்றது.

ஒருவன் பணத்தைப் பிறர்க்குதவி செய்யாதும், தானும் அனுபவியாதும், தனது சுற்றத்தினர்க்கும் ஆபத்துற்ற ஞான்றும் உதவிபுரியாதும் சேர்த்து வைப்பானேயாகில்; அவன் புண்ணுர் ஆக்கையைப் பெற்று இந்நிலவுலகில் இருந்தென்? இறந்தென்?

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்த
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்!—கூடுவிட்டு
இங்காவிதான் போயினபின் யாரேயனு பவிப்பார்
பாவிகா ளிந்தப் பணம்"

என்பதனுல், கரதலா மலகம்போல் விளங்கும்.

ஆதலால், நாம் பணத்தைச் சேர்த்து வைப்பதிலே கண்ணுங் கருத்துமாயிராமல், கொஞ்சம் தானதருமமியற்றி, நமது உடம்பென்னும் கோயிலில் அறிவு என்னும் அவியா மதிவிளக்கினை யேற்றி சங்கநாதம் செய்து கொண்டும், சிங்கநாதம் செய்துகொண்டு முள்ள சாமிநாதனை நம் அங்கமாகிய மூலத்தானத்திலே நிலைபெறச்செய்து துதித்து அருளுடையோ ராவோமாக. சுபம்! சுபம்!!

"விவேகபாநு" அன்பர்களுக்கு

அன்பர்காள்!

நமது பாநு உதையமாகி இத்துடன் ஏழு மாதங்களாகின்றன. நாம் இதுகாறும் சந்தாவையேனும், வேறு எவ்வித வருமானத்தை யேனும் எதிர் பாராமல் பத்திரிகையை நடாத்தி வந்திருக்கிறோ மென்பது அன்பர்கட்கு நாம் சொல்லாமலே விளங்கும். மேலும் மேலும் நம் பாநுவைச் சிறந்த முறையில் நடத்துதற்குச் சந்தா நேயர்களின் ஊக்கத்தை பொறுத்திருக்கிறது. இதுவரை நம் பாநுவைப் படித்தின்புற்ற அன்பர்கள் சந்தா ரூபாயை அனுப்பி நமக்குப்போதிய ஊக்கத்தை உண்டு பண்ணும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

ஓவியமும் தமிழரும்

பூளைமேடு, தமிழ்ப்பண்டிதர்,

திருவாளர் மூ. வே. மா. உலக ஊழியர் எழுதியது

(முன் தொடர்ச்சி)

அவ்வாறு வையும் மாக்களும், எழுதும் மூகையரும், இம்மையிற் றுன்பமும், மறுமையில் நிரயமும் எய்துகின்றனரே யன்றிப் பெரியார் உருவத்திற்கும், அவ்வுருவைப் போற்றும் அடியார்க்கும் அவ்வுருவமருளும் அருளுக்கும் யாதும் தீங்கு செய்திலர். ஓவியர் முன்னவை பெறுவாரல்லரேனும், பின்னவை புரிகின்றனராதலின் என்க.

இனி, ஓவியர், மக்களுட் சிறந்தார்க்குக் கூறிய பண்புடைமையுள் ஒன்றாகிய பொறுமைக்கு உறைவிடமாதல் வேண்டும்; ஒரு பொருளை பலமுறை ஆய்ந்தறிதற்கும், அப்பொருளின் உருவைத்திருத்தமாய் எழுதுவதற்கும் அது இன்றியமையாமல் வேண்டப்படுதலின், இனி, மெய்யுணர்வென்னும் வீட்டிற்கு வாயிலாகிய ஒருமையுள்ளம் உடைய ஓவியனே சிறந்தவனாவான். இதனான் அன்றே "பல்லூழ் இவை இவை நினைப்பின் வல்லோன் ஓவத்தெழு தொழில்போலும்" (பரிபா—21) என்னும் மொழிகள் தோன்றலாயின. மன ஒருமையுடன் ஒருவன் எழுதிய ஓவியங்களே பார்ப்பவரை மன ஒருமையில் இருத்தும். அவ்வாறு மன ஒருமையுடன் எழுதப்படாத ஓவியங்கள் பார்ப்பவரின் உள்ளங்களை அலைக்கும். எவ்வாறெனின், காதலனும், காதலியும் ஒரு நினைவுடன் மணந்து பெற்ற ஒருவர் இவ்வுலகில் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுகின்றனர். எல்லாருக்கும் நல்லறிவு ஈகின்றனர். அது போல உளமும், கண்ணும் கையும் ஒருமைப்பட்டு எழுதலினால் உளதாகிய ஓவியம் தன்னைப் பார்த்தவரை மகிழச் செய்விக்கின்றது. அன்றியும், உள ஒருமையும் அளிக்கின்றது. ஓவியப் புலவனைத் தந்தையாகவும், ஓவியத்தை மகவாகவும் கூறுதல் பொருந்தும். இங்குத்தான் அன்றே சிற்பிகளைப் பிதா என்று கூறுப. அன்றியும் தூய உள்ளத்தின் வழி உளதாகிய சொல் தூயதாமாறு போலத் தூய உள்ளம், கண், கைகளால் உளதாகும் ஓவியமும் தூய்மை அளித்தலைப் பெறுதல் இயல்

பன்றோ? தூய்மை என்றது ஈண்டு உள ஒருமையை. அதன் வழியே அது தோன்றுதலின் "விதை ஒன்று விதைக்கப் பயிரொன்று தோன்றுதன்றோ? தந்தை இயல்பு மைந்தன் இயல்பு; என்றுரைத்தல் நந்தண்டமிழ் மொழிக்கு உண்டன்றே.

இனிச் சிறந்த ஓவியப்புலவன் ஒருவாற்றால் படைத்தற்கடவுளுட னும் ஒப்புமையுடையனாகின்றான். படைத்தற் கடவுள் உடலைப் படைக் கின்றான். ஓவியப் புலவனும் உடலைப் படைக்கின்றான். அன்னானும் உயி ரைப் படைத்திலன். இன்னானும் உயிரைப் படைத்திலன். இவ்வளவில் ஒற்றுமை மிக்கிருத்தல் காண்க. அன்னான் உயிர்படைக்கின்றான் 'என்று பெரியோர் கூறுகின்றனரே எனின், உயிர்களை மறைத்துப் பின்னர் விடுத்தலை நோக்கி அவ்வாறு கூறுகின்றனர் என்க. இது ஒருவகை மரபாம். மறைத்து விடுத்தலை "விழுங்குயிர் உமிழ்ந்தனை" (புறம்பயம் தேவாரம் திருமுறை-2)என்னும் பெரியார் வாக்கான் உணர்க. நிற்க, இருவருக்கும் வேறுபாடு என்னை எனின் அன்னான் படைக்கும் உடல் உயிரின் துணையால் இயங்குகின்றது. உயிர் உறைதற்கு இடமாகின் றது. இன்னான் எழுதும் ஓவிய உடலுக்கு அவை இல.

இனி, கடவுளையும் ஓவியப் புலவன் என்று ஓர் பெரியார் "உடுக் கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்து இருக்கும் உயிர் ஓவியமே" (மீனாட்சியம்மன் பிள்ளை வருகை) என்று கூறியுள்ளமை அறிந்து மகிழ்க. இதனுள் ஓவியம் எழு தும் முறையையும், அன்னோனே தன் ஓவியத்தைக் கண்ணிமைக்காது பார்த்து மகிழும் மகிழ்ச்சியையும், அவன் அசைவற்று உள ஒருமையு டன் இருக்கும் நிலைமையையும் அழகொழுக மொழிந்துள்ளமை நோக்கி மகிழ்க. உயிர்ப் பொருட்களின் மெய்ப்பாட்டினையும், ஓவிய உருவில் காட்டும் ஆற்றல் ஓவியப் புலவனுக்குளதெனின் அன்னான் சிறப்பினை அறிவார்யாரே. இது காறும் கூறியவாற்றால் ஓவியப் புலவன் இயல்பும்,அவன் பெருமை இத்துணையென்று வரையறுக்க முடியாமை யும் சொல்லப்பட்டன.

இனி, இவ்வோவியக் கலையைத் தமிழ் நாட்டார் எவ்வகையில் அறிந்திருந்தனர். இப்பொழுது எவ்வகையில் அறிந்திருக்கின்றனர் என்பன ஒரு சில கூறி இக்கட்டுரையை முடிக்குதும். பண்டைத் தமி ழர் ஓவியக் கலையை நன்கு உணர்ந்திருந்தனரா? இல்லையா? என்பன வற்றிற்குச் சான்றாக உள்ளன அம்மக்களுள் அறிவுடையாரார் செய்யப் பட்ட பழந்தமிழ்ச் செய்யுட்களேயாம் என்பதனை யாரும் மறார். பிற

வும் உளவேனும் அத்துணைச் சிறப்பில. பண்டைத் தமிழ்ப் புலவர் ஓவிய உலகிலேயே நன்கு வதிந்திருந்தனர். மிக்க பழம் பாட்டுக்களில் ஓவியத்தைப்பற்றிக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில், ஓவியச் செய்வினை அமையப்பெற்றுள்ள சக்ரவாளக் கோட்டம் என்ற ஒரு நிலையம் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தது என்று கூறியுள்ளார். அதனுள் ஓரிடத்து

"நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
நல்லவழி எழுதிய நலங்கிளர் மாடமும்"

எனக் கூறியுள்ளார்.

இதனுள் எழுதும் இயல் நலம் அமைய "நல்லவழி எழுதிய" து என்று கூறியது நாம் உற்று நோக்குங்கால் நமக்கு எவ்வளவு அழகு பயக்கின்றது. ஊரா நற்றேர் ஓவியப் படுத்து" எனக் கூறியுள்ளார். இனி ஓவியங்கள் விளக்கமான சுண்ணத்தால எழுதப்பட்டிருந்தன என்றும், அவ்வோவியங்களை எழுதியவர் சதுரப்பாடு கெழீ இயவராயிருந்தனர் என்றும், மக்கள் அவ்வோவியங்களைக் கண்டு அவற்றின் அழகில் ஈடுபட்டுக் களிகூர்ந்து நின்றிருந்தனர் என்றும் பொருள் பொதிய

"தெண் சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்"

என்று கூறியுள்ளார்.

சோழன் மகன் உதயகுமரன் எனப்படுவான் மணிமேகலையின் உருவின் சாயலைப் பளிக்கறைப்புறத்துக் கண்டு அதனைச் சித்திரக்கைவினையென்று கூறியருளினர். இதனல் அக்காலத்துச் சித்திரங்கள் நிறைந்த அழகுடையனவாய் வரையப்பட்டிருந்தன என்பது பெறப்படுகின்றதன்றோ?

"குரவமும், மாவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி"னவாய்

நிற்கும் ஓர்மலர் வனம். (தொடரும்)

தமிழ்ப்பொழில்.

:: செய்ந்நன்றியறிதல் ::

திருவாளர் எம். ராஜமாணிக்கம் எழுதுவது
(ஸ்ரீநடராஜ சபை, வண்ணாரப்பேட்டை சென்னை)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்று திருக்குறளில், நமக்கு ஒருவன் செய்த நன்மையை மறப்பது நன்றல்ல. ஆனால், அவன் தீமையை அக்கணமே மறத்தல் நன்று என்று நாயனார் அறைகின்றார்:

'செய்ந்நன்றி' என்றால் என்ன எனில், ஒருவன் நமக்குச்செய்த உதவியாகும் அவ்வுதவி இரண்டு வகைப்படும். நம்மிடம் பிரதி நன்றியைக்கருதாது, நமது ஆபத்துக்காலத்தில் உதவுதல். நமக்கு உபகாரம் செய்து நம்மிடம் பிரதி நன்றியை எதிர்பார்த்தல். ஆனால், இதில் பிரதிபலனை எதிர்பாராமல் செய்யும் நன்றியையே நாம் ஈண்டு எடுத்துக்கொள்வோம்.

ஒருவனிடம் ஓர் உதவியும் கருதாது, அன்புடைமையே காரணமாக ஒருவன், நன்மைசெய்யின், நன்மை பெற்றுக்கொண்ட அவன், அதனை என்னான்றும் மறவாது இருத்தல் அவசியம். மேலும், அவன் பெற்ற நன்மைக்குப்பதிலாக இப்பூவுலகையும் மேலுலகையும் கொடுத்தாலும் சமானமாகாதென்பதை அவன் உணரவேண்டும். இதனை நோக்கியே திருவள்ளுவர்,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் மாற்ற லரிது" என்றார்.

மேலும், தன் நண்பனின் மிகவும் ஆபத்தான நிலைமையில் ஒருவன் ஒரு சிறு உபகாரம்செய்து, அவனைக் காப்பாற்றுகின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவன் செய்த வுபகாரம் மிகவும் சிறிதேயாயினும், நண்பனின் ஆபத்தை விலக்கியதன்றோ? ஆதலால் அவ்வுபகாரத்தின் அளவை நோக்காது, காலத்தின் அளவையே உற்று நோக்கி அத

னைச் சீர்தூக்கிப் பார்த்தால், அக்காலத்தின் உதவி இப்பெரியதோர் பூமியினும் மிகப் பெரிது என்று கொள்ளப்படும். இவ்வித ஆபத்தைத் தடுத்த உதவிக்கு உவமை சொல்லல் இயலாவாம். இக்கருத்தினையே,

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று நாயனார் குறள் விளக்குகின்றது. அவ்வித அரிய வுதவி செய்ந் நன்றி யறிதலுடைய கற்றறிந்த பெரியோர், தினையளவாக இருப்பினும் பனையளவாக நினைப்பர்.

இங்ஙனம், நன்றியைப்பெற்ற ஒருவன் யாது செய்தல் வேண்டும் எனில்? தனக்கு நன்றிசெய்தார்மாட்டுக் கொண்டதாகிய நட்பினைத் தான் இறக்குமளவும் மறவாதிருத்தல் ஒன்றே பெரிதும் அவசியமுமா கும். இதன்றி அறிவுடையோர் நட்பை என்றும் மறக்காது, அவர்க ளைப் போற்றல் வேண்டும். மேலும், தனக்குச்செய்த நன்றியை ஒரு பிறவியில் மாத்திரமேயன்றி, எழுபிறவிகள் தோறும் மறவாது எண் ணல் வேண்டும். இதனை,

"எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு"

என்னும் குறளாலும் அறியலாம்;

இவ்வித மேன்மை வாய்ந்த செய்ந்நன்றியை மறந்தால், ஒருவன் அடைவது யாது என்றால்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் நாயனார் உறுதி மொழிப்படி,

ஒருவன் எவ்விதமாகிய தருமங்களை யெல்லாம் அறவே கெடுத்தா லும் நரகத்துன்பத்தை யனுபவிக்கவேண்டும். பின்னர் பிராயச்சித்தம் எற்படினும் ஏற்படும். ஆனால், செய்த நன்றியை மறப்போர்க்கு நரகத் துன்பத்தினின்றும் நீங்கவழி யில்லை.

இவ்வித நன்றியறிதலை, உதாரணம் கொண்டு விளக்குதல் அவசிய மாதலால் ஈண்டு ஓர் சிறு உவமை யெடுத்துக் கூறுவோம்.

இவ்வித நன்றியறிதல் துரியோதனனிடத்தும், கர்ணனிடத்தும் காணலாம். கர்ணன் தன்மகன் என்பதைக் கண்ணன் மூலமாய் உணர்ந்த குந்திதேவி, கண்ணன் ஏவற்படி கர்ணனைக்கண்டு, தானே

அவனைப் பெற்றவள் என, அவன் நம்புமாறு சில விநோதங்களைச் செய்தனள். கர்ணன் அதிக மகிழ்ச்சியடைந்தான். தான் இதுவரையில் தேர்பாகன் பிள்ளை யென்று பலர் கேவலமாகப் பேசியதும் எண்ணி வருந்தினன். அப்பொழுது குந்தி தன்மகனை நோக்கி, "என் சுதனே! நீ யுத்தகளத்தில் உன் தம்பியருடன் இருந்து நீ இட்ட ஏவல்களைக் குறைவறச் செய்து அவர்கள் பிழைக்குமாறு செய்வாயாக" என்றனள். அது கேட்ட கர்ணன் தாயின் பாதங்களைப் பரிவுடன் பணிந்து, ',அன்னாய்! நான் பாண்டவர்க்குமுன் தங்கள் வயிற்றிற் பிறந்தும், பாண்டவரிடத்து மகிழ்ந்திருக்க பாக்கியம் அற்றேன். இது என்னுடைய தீவினைப்பயன். ஆயினும், வணங்கா முடியோன், என்னை - இழிகுலத்தான் பலர் இழிவாகப் பேசும் என்னை-தனது உயிர்த்துணைவனாகக்கொண்டு, என்னை யாவரும் போற்றுமாறு, அங்க நாட்டிற்கு அரசனாக்கினன். மேலும், என்னெச்சில் என்னோடும் உண்டான். இதுமாத்திரமா? நானும், அவனது மனைவியும், ஓர் நாள் தனியே சூதாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது துரியோதனன் அங்கு வந்தது யான் அறியேன். அவனது வருகையை யுணர்ந்த அவன் மனைவி, ஆட்டத்தை விட்டு, எழுந்து செல்ல ஆரம்பித்தாள். நடு ஆட்டத்தில் அவள் எழுந்ததைக் கண்ட யான், அவளைத் தடுத்தற்பொருட்டு, அவள் சேலையைப்பற்றி இழுத்தேன். இழுத்த வேகத்தினால் அவள் இடையில் கட்டியிருந்த மேகலை அற்றுக் கீழே சிதறின. இவற்றைக் கண்ணுற்று நின்ற மன்னவன், என்னை நோக்கி, "அண்ணா! சிந்திக்கிடக்கும் இம்மணிகளைப் பொருக்கட்டுமா? அல்லது கோர்க்கட்டுமா?" என்று கேட்டான்.

"மதமாமதக் களிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி யுலகறியு மன்றே—உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்து நல்லோர்கள்
குன்றுவருவதோ செய்ந்நன்றி கூறு."

"மைத்தடங்கண் மாதேவி வார்த்துகிலை யான்பிடிப்ப
அற்று விழுந்தவரா மணிகள்—மற்றவற்றைக்
கோக்கேனோ வென்றுரைத்த கொற்றவர்க் கெனாருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு."

"நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறியக்
குன்றா நன்மைபல கொடுத்தான்—என்றாலும்
ஈண்டவன் செய்த வுதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து."

அங்ஙனம், என்பால் விகல்பமின்றி அளவு கடந்த அன்பு வைத்துள்ள துரியோதனனை விட்டு, அவன் இதுவரை எனக்குச் செய்த நன்றியை மறந்து, பாண்டவர்களுடன் யான் சேரமாட்டேன். அங்ஙனம், தங்கள் வார்த்தையின்படி யான் நடந்தால், செய்ந்நன்றி கொன்றவன் ஆவேன். வீரலட்சுமி என்னைச் சேராள். என்று பணிவுடன் கூறினன்.

இத்தகைய உயரிய செய்ந்நன்றியின் உன்மையை நன்குணர்ந்து, யாவரும் நல்வழியில் நடந்து, இறைவன் இன்னருளைப் பெறுவார்களாகுக.

"நட்பு"

தஞ்சை T. S. அநுமந்தராவ் எழுதுவது

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு" என்னும்,

ஆன்றோர் மொழிக்கிணங்க, ஆடைசோர்ந்தபோது உதவிசெய்கின்ற கைபோல நேசனுக்கு ஆபத்துவந்தபோது தாமே அறிந்து உடனே உதவி புரிதல் நட்புரிமையை நன்கு விளக்கும். மன்னுயிர்கள் புகழுடன் உய்வதற்குப் பலவிதமான நீதிகள் நம் முன்னோர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் "இணக்கமறிந்திணங்கு" என்பது ஒரு சிறந்த நீதிவாக்கியமாகும்.

நாம் ஒருவனோடு சினேகம் செய்யுமுன் அவனது குணத்தினையும், குடிப்பிறப்பினையும், குற்றத்தினையும், குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்தறிந்து நட்புசெய்தல் வேண்டும். ஒருவனோடு நட்பு செய்தபின் அவனைவிட்டுப் பிரிதலும் கூடாது.

"ஒருமையுடன் நினதுதிரு மலரடியை நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்"

என்று கூறியபடி நாம் பெரியவர்களின் கேண்மையைக் கொள்ளல் வேண்டும். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் இவற்றில் சிறந்து விளங்

குபவரே பெரியோர் எனப்படுவர். நாம் பெரியவர்களுடன் பழகினால் சிறந்து விளங்கலாம். பாலோடளாவிய நீர் பாலாகுமல்லது, நீராய் நிறந் தெரிந்து தோன்றாதாம். ஆகையால் நாம் முன்னேற்றமடைய வேண்டு மானால் பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும்.

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
குருத்திற் கரும்பு தின்றற்றே."

என்று நாலடியாரில் கூறப்பட்டுளது. மேலும்,

"ஊரங்கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகி தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

என்னும் செய்யுள் பெரியவர்களின் சகவாசத்தால் ஏற்படும் நன்மையை நன்கு விளக்குகின்றது.

அரக்கர் வம்சத்தில் உதித்த விபீஷணர், சூரியவம்சத்து மன்ன ராகிய தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரர் ஸ்ரீராமபிரானோடு நட்பு கொண்டமையால் அடைந்த கீர்த்தியை உணராதார் யாவர்?

"உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"

இவ்வாக்கியம் தீயவர்களின் சிநேகம் கூடாது என்று போதிக் கின்றது. ஏனெனில் "நல்லிணக்கமல்ல தல்லற் படுத்தும்" துற்சனரு டன் நாம் பழகினால் அவர்களுடைய துற்நடத்தைகள் நம்மிடம் வேரூ ன்றி விடும். தீய சிநேகம் முடிவில் துன்பத்தை விளைவிக்கும் "தீயா ரைக் காண்பதுவும் தீதே" என்று சொல்லி யிருப்பதால் கெட்டவர்க ளின் நட்பை அறவே ஒழித்தல் நலம். இனி துற்சகவாசம் எத்தன்மை யது என்பதை விளக்குவோம். கையில் பொருள் இருக்கும் வரையில் சிநேகிதர்கள் திரள் திரளாக இருப்பது வழக்கம். தீயவர்கள் எப்பொ ழுதும் துற்போதனையே செய்து வருவார்கள். உதாரணமாக குமணச் சக்கரவர்த்தியின் தம்பி அமணன் துஷ்டர்களுடன் கலந்து அவர்களின் துற்போதனையால் குமணச் சக்கரவர்த்தியைக் கொல்லவும் துணிந் தான் அல்லவா?

"மனத்தான் மறுவிலரேனும் தாம்சேர்ந்த
இனத்தா னிகழப் படுவர்—புனத்து

வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபனந் தீப்பட்டக் கால்"

என்னும் செய்யுள் தீயவர்களுடன் சேர்ந்தால் ஏற்படும் தீமையை நன்கு விளக்குகின்றது;

ஆகவே, ஒவ்வொருவரும் கெட்ட சினேகத்தை விலக்கி, நல்லவர்களின் சினேகத்தைத் தழுவவேண்டும். சினேகத்தன்மையின் சிறப்பு பெற்றோர்கள் சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். சிறுவர்கள் வீட்டில் ஒருவர்க்கொருவர் மனம் வேறுபாடின்றி தம் தாய்தந்தையரிடத்திலும், தம்பிமார்களிடத்தும் சினேகத் தன்மையைப் பழகவேண்டும். நாம் நமது சிறு சுற்றத்தில் ஒருவரை யொருவர் நேசித்திருப்பதற்கு ஏற்றபடிதான், சினேகத்தன்மை முதலிய பெருங்குணங்கள் பிற்பாடு உற்பத்தியாகும். நமது சுற்றமாகிய இச்சிறுமையத்தினின்றுமே சினேகத்தன்மை சிறுகச் சிறுகச் சுற்றிப்பரந்து கடைசியில் உலகம் முழுவதும் வியாபிக்கும். சினேகத்தன்மை வீட்டில் உற்பத்தியாகியே பின்பு மற்றெங்கும் பரவுகின்றது.

ஆகவே, நன்மை தீமைகளை நன்கு விளக்கி அவ்வழியிற் புகாமல் தடுத்து நன்னெறியில் பழகச்செய்பவர்களே உத்தம நண்பர்களாவர். ஒவ்வொருவரும் நன்னடத்தையைமேற்கொண்டு அனுதினமும் முருகனை தொழுது அவர் அருள்பெற்று நீடூழிகாலம் சுகமுற வாழவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

நமது
"விவேகபாநு"வுக்கு
சந்தாதாரர்கள், விளம்பரங்கள்,
சேர்த்துக் கொடுக்க
எஜெண்டுகள் தேவை.
தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

:: துயரம் ::

ஸ்ரீ பாரத மாதா தன் அருமருந்தன்ன திருக்குமாரர் பாஞ்சால சிங்கம், லாலா லஜபதிராய் துஞ்சிய துயராற்ருது வருந்திப் புலம்பிய கையறு நிலை

பொள்ளாச்சி, தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமான் நா. கனகராஜ ஐயரவர்கள் பாடியது

பொன்னை யிழந்தேன்! பொறுத்தேன் அரசிழந்தேன்!
பின்னை யடையப் பெறுவேனென்—றுன்னினனே!
உன்னை யிழந்தேன்! உரைசால் லஜபதியே!
என்னை யிழந்தேனே யான். 1

என்னை மறவான் இறந்தான் மறந்தானே!
தன்னை மறந்த தகையாளன்—அன்னைபணி
போலாம் பணியுளதோ புத்திரர்காள் என்றுபுகல்
லாலா லஜபதி ராய். 2

உண்ணிறைந்த அன்பினொடு பணிபுரியும் உயர்விரதம்
உடையோ ரான
எண்ணிறந்த மக்களுளேன் பாரதத்தாய் எனும்பெயரும்
இயம்பப் பெற்றேன்!
கண்ணிறைந்த மணியெனது காதலன்பிற் கசிந்துருகு
காளாய் நீதான்
மண்ணிறந்து விண்ணடைய மாழ்கினனே! லஜபதியே!
மைந்தா! மைந்தா! 3

என்குறையை எடுத்துரைப்பார் எண்ணிலராய் இருக்குமிந்நாள்
என்பால் ஏய்ந்த
அன்புதுணை கொடுதுருவி மெய்ம்மையென அறிஞர்கொள
அவனி போற்றத்
துன்பநிலை யுறுமெனது துயர்வரலா றளந்துரைத்த
சொல்லின் செல்வ!
இன்பநிலை யெனக்கியற்ற வெண்ணமிட்ட **லஜபதியே!**
எங்குற் றுயே! 4

நீயிறந்த பெருந்துயரால் எனதுமகார நினக்கிளையர்
நெறிகா ணுது
வா[illegible]ழந்து துணிவிழந்து மனமிழந்து செயலிழந்து
மாழ்கி நின்றார்!
போயிறந்த விண்ணகத்தும் புகழ்பரப்பி என்பெருமை
புலவர்க் கெல்லாம்
வாய்திறந்து புகல்வதற்கோ வவணடைந்தாய்! **லஜபதியே!**
மைந்தா! மைந்தா.! 5

வாக்குவளம் அறிவினுரம் மனவுறுதி தாய்பணியில்
மாறு வூக்கம்
தூக்குதுணி வின்பமொடு துன்பமுமொன் றெனமதிக்கும்
சூழ்ச்சி ஆக்கம்
போக்குநிலை வருமெனினும் புகுந்தநெறி துணிந்துசெலும்
புத்தி மாண்பு
காக்குமொரு கோயில்நிகர் காதலனே! **லஜபதியே!**
கரந்தாய் கொல்லோ! 6

எனக்குரிய பணிபுரிவார்க் கியைபுடைய சங்கமுமொன்
றியற்றி யிட்டாய்!
நினக்குரிய மகன்மகளை **லஜபதியே!** யெனக்கணியா
நிலவ வைத்தாய்!
வினைக்குரிய திட்பமுளாய்! வியத்தகுநூற் கல்வியொடு
மிக்க கேள்வி
தனக்குரிய வணியெனக்கொள் தகையாள வடைந்தநெறி
சாற்றுய்! சாற்றுய்.! 7

மறந்தனையோ பெருந்தகையே நினதுமனம் அகலாது
 வாழும் என்னைத்
துறந்தனையோ துறவறத்தின் பெருமையுணர்ந் தொருகணமும்
 துறவா வென்னை
இறந்தனையோ **லஜபதியே!** என்னருமை மகனேயோ!
 இருமை யெய்தப்
பறந்தனையோ பேரின்ப நெறிகுறுக மனமிறக்கும்
 பயிற்சி பெற்றே. 8

நானா திசைபுகழும் **லாலா லஜபதிராய்**
யானா மெனவமைந்த என்மைந்தன்—வானாடு
போயினான் யானும் புகுந்தேன் துயர்க்கடலுள்
ஆயினேன் ஓரோவி யம். 9

பாரத தேவி பழம்பெருந் தெய்வமென
யாரெடுத்துப் பேசுவர் என்னியல்லை—நாரமைந்த
சிந்தை யுடைய சிறுவரையான் காண்பேனோ
இந்த வுலகி னிடை. 10

உடற் பயிற்சி

அல்லது

இருமைக்கும் ஒரு மருந்து

கலவல கண்ணன் செட்டியார் உயர்தரப் பாடசாலை தமிழாசிரியர்,
பெரம்பூர், சென்னை

ஸ்ரீமான். பா. பக்கிரிசாமி செட்டியார் எழுதியது

அடைதற்கரிய மானிட யாக்கையை யெய்தியநாம், சாதிக்க வேண்டிய தென்ன? இப்பிறவியை ஆண்டவன் நமக்களித்த! தன்னோக்கமென்ன? அறம், பொருள், இன்பம் வீடு எனும் சதுர்வித புருடார்த்தங்களை அடைதலன்றோ நாம்சாதிக்கவேண்டியது? இறைவனது நோக்கமும் அதுவல்லவா? அறம் புரிதற்கும், பொருளீட்டற்கும், இன்பந் துய்த்தற்கும், இறுதியில் வீடடைவதற்கும் இன்றியமையாதது திட

சரீரமாகும். ஆகவே, இவ்வுலகத்தில் உயிரோடு வாழுந்தனேயும், நோய் வாய்ப்படாமல் திடசரீரியா யிருக்கவேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழி வலியுறுத்துவதே போல், நோயில்லா வாழ்க்கையைவிட மேலான செல்வம் பிறிதொன்றுண்டோ? எனவே, சரீர சுகத்தைத் தருவது எதுவென ஆராயப்புகின், தேகப் பயிற்சி யென்றே தெளிவாகும்.

தேகப்பயிற்சியைத் தேவையானவரையில் அடைந்து வந்தால் அது தேக திடத்தையும், நீங்காத சுகத்தையுந் தருமென்பதற் கைய மில்லை. கல்வியில் அல்லது செல்வத்தில் மிகுந்தவரா யிருக்கு மொருவர் தேகப்பலமின்றி நோயால் வாடியிருந்தால், அவரால் ஏற்படும் நன்மை யென்ன? வாணுள் சுருங்கி வீணராக வேண்டுமேயன்றி வேறேதுபயன்? ஆகவே, எவருக்கும் தேகபலம் வேண்டும். தேகபலமுடையோர் இன்ப வாழ்வில் திளைத்திருப்பரன்றே?

சுகத்தை விரும்புகிறீர்களா?

தேகப்பலன்பெற தேகப்பயிற்சி செய்யவேண்டும். தேகப்பயிற்சி யென்பது சரீரத்திற்கு, உடலுக்கு அறிவிக்கும் அப்பியாசம், வேலை யென்று பொருள்படும். வேலைசெய்வது எந்த உயிர்க்கு மியல்பு. அவய வங்களைப் படைத்த அனைத்தாய ஜீவன்களும் வேலைசெய்வதே விசே ஷம். நானுவித விலங்குகளையும் பாருங்கள்! உருவத்தில் பருத்தயானை முதல் மண்ணில் உதிக்குங் கடைசி அணுப்பூச்சி புழுவரையில் யாவும் இடைவிடா முயற்சியினுலேயே உயிர் வாழ்கின்றன. வலிமை மிக்க சீய மேனும் பிரயாசையின்றி வசிக்கின்றதா? இல்லை. அதுவும் ஆடி யலைந்து இரை தேடியே பிழைக்கின்றது. மக்களில் பெரும்பான்மை யோரும் பாடுபட்டு உழைத்தே உயிர் வாழ்கின்றனர். அவ்வாறிருக்க, ஏனையோர் ஏன் தேகபலத்திற் காதாரமான தேகப்பயிற்சி செய்யாது சோம்பிஜீவிக்கவேண்டும்? எதற்காக கடவுள் அவயவங்களை அளித்தார்? அவைகளைத் தக்கவாறு உபயோகிக்க வன்றே? கண்கள் காண்கின்றன; செவிகள் கேட்கின்றன; நாசி சுவாசிக்கின்றது; பிற உறுப்புகளும் உடம்பு மேன் உழைத்தலாகாது? சில உறுப்புகள் வேலைசெய்ய, பிற சோம்பியிருக்கலாமா? வறிஞரும் தொழிலாளரும் தங்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கு வேலை செய்கிறார்களென்றல் தனிகரும், பிற ரும் ஏன் தங்கள் தேகசுகத்தைக்கோரி தேகப்பயிற்சி செய்யக் கூடாது?

சரீர அமைப்பு

மாந்தர்க்குள்ளது எண்சாணுடம்பு. இந்த எண்சாணுடம்பில் எத்துணை நரம்புகள்! மூட்டுகள் மடங்கி நிமிரக் கண்டிப்பாய் தேகப் பயிற்சி வேண்டும். நரம்புகள் தளரவும், இருதயத்தினின்று இரத்தம் புறப்பட்டுத் தாரைகள் வழியோடி மறுமுறையும் தன்னிடம் வந்து சேரவும் நடக்க வேண்டும். தேகப்பயிற்சி செய்தால் கண்டிப்பாய் மயிர்க்கால் வழியே கெட்ட நீர் வியர்வைமயமாய் வெளிப்படும். இரத்தஞ் சுத்தியடைந்து உடலாதியந்தமும் தடையின்றி யோடி உடல் முழுவதற்கும் நன்மையை நல்கும். அதுகாலை கால், தலை நோயில்லை; மற்ற எந்த வியாதியு மேற்பட இடமில்லை. சகல உறுப்புக்களும் தத்தம் தொழிலை பகற்பொழுதில் பயில்கின்றன. இரவில் அனைத்தும் ஒருங்கே ஒய்வெடுத்துக்கொள்கின்றன. இத்தகைய உடல் எவ்வாறு விளங்கும்? பெருத்துப் பருத்து அளவை மிஞ்சிய பூதம்போலிருக்குமா? இல்லை; இல்லை; கண்கள் பறிக்கும் கட்டழகுடைத்தாய் விளங்கும். இவ்வித சரீரத்தைக் கண்ட பிணியும் பிறவும் பூனையைக்கண்ட எலியாம். தன் ஜீவியகாலத்தில் அரியபெரிய காரியங்கள் பல இயற்றுவான். நிற்க, உடற்பயிற்சியால் வரும் உயரிய பயனை யறியாது மெத்த பலஹீனர்களாகவும், அநேக நூதன வியாதிகளை யுடையவர்களாகவும், அற்ப ஆயுளுடையவர்களாகவு முள்ளவர்கள் நமது முன்னோர் தங்கள் உடல் உழைப்பால் நல்ல திடகாத்திரம் பெற்று நோயற்ற வாழ்வினராய் நீண்டகாலம் உயிரோடிருந்தனர் என்பதை உணர்வதற்கு, உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கிறேன்.

ஓர் நிகழ்ச்சி

பண்டையில் நமது பார்த்திப ரொருவர் தமது ஒய்வு நேரத்தில் தம் மனைவி மக்களோடு நாடோறும் கொட்டை நூற்றும், பாவோட்டியும், தறிப்பூட்டி நெய்தும் கச்சைகளைப் பின்னுவார். நேர்த்தியான பீதாம்பரங்களை நெய்வார்; இன்னும் எண்ணிறந்த வேலைகளைச் செய்வார். அவர் தம்மாலும், தமது பெண்டு பிள்ளைகளாலும் நெய்யப்பட்ட உடைகளை யன்றி பிறவற்றை உடுத்தார். அவனியாளும் அரசர்க்குக் குறைவென்ன? அன்றி இவை கிடைப்பதரிதா? ஒரு குறைவும், அரிதுமில்லை. அவ்வாறாயின் ஏனப்படிச் செய்தார்? அப்பெரியார், சிருஷ்டியின் தன்மையையும் தேகப் பயிற்சியின் பெருமையையும், அதனால் தமக்கு வரும் சுகத்தையும் ஆய்ந்து அறிந்தவராதலால் அவ்விதம் கடனுற்றினர். ஆனால் கைத்தொழிலை, முக்கியமாய் எதையும் அலட்சியஞ்

செய்யும் நம் சகோதரர் யாது சொல்வர்? நெசவுத்தொழில் நிசிதமா யிற்றே; அரசன் எவ்விதம் அத்தொழிலைச் செய்தார்; எவ்வாறு செய்யக் கூடும்? வெட்கம், பேர் அவமானம் என்பர். இவ்வித அற்ப அறிவா லேயே நம் நாட்டார் மேனாட்டாருடன் சகல விஷயங்களிலும் பின் னடைந்து கடைசியில் அவர்கட்கடிமையானார்கள்.

படித்தலால் பயனில்லை

ஆகவே, தேகப்பயிற்சி அவசியம் வேண்டற்பாலது. ஆண், பெண் இருபாலர்க்கும் இன்றியமையாதது. ஒவ்வொருவரும் தேகப் பயிற்சி செய்து பழகினாலன்றி வாழ்க்கையை இன்பமாய் நடத்த இயலாது முக்கியமாக நம்நாட்டில் கற்றவர்களே தேக திடனின்றி யிருக்கிறார் கள். மாணவர்களும், அறிவைக்கொண்டு உழைக்கும் உத்தியோகஸ்தர் களும் பிரதிதினமும் ஒருமணி நேரமாவது உடற்பயிற்சி செய்யவேண் டும். அதுவும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் செய்வது சாலச்சிறந்தது.

தேகப்பயிற்சி பலவகையாகும். அது வயதுக்குத் தக்கவாறு மாறு படல்வேண்டும். சிறுவர் ஆடுதல், ஓடுதல் குதித்தல் முதலானவற்றில் பழகல் வேண்டும். வாலிபர் பந்தாடுதல், கசரத்து செய்தல், தண்டால், பஸ்கிபோடுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்யவேண்டும். வயோதி கர் நடத்தல். வண்டியேறிச் சவாரி செய்தல் முதலிய வற்றில் பயிற்சி செய்யவேண்டும். இதனால் சிறுவர் முதல் விருத்தர்வரை அனைவர்க்கும் தேகப்பயிற்சி வேண்டு மென்பது அவசியமாகிறது. எதையும் படித் தால் பயனில்லை, படித்தபடி நடந்து, அதனால் வரும்பயனை யடைய வேண்டிய தவசியம். ஆகவே, அனைவரும் தேகப்பயிற்சி செய்து சுக வாழ்வு பெறுவாராக:

நீங்கள் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கவேண்டுமானாலும், உலகியல் விடயங்களை உணர வேண்டுமானாலும், அரசியல் விடயங்களை அறியவேண்டு மானாலும் நம் "விவேகபாநு"வை மாதந்தோறும் இடை விடாமல் படியுங்கள்!

வருடச் சந்தா ரூபா ஒன்று தான்.

உடனே சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்பி நீங்கள் சந்தாதாரர்களாகச் சேர்வதுடன், தங்கள் நண்பர்களை யும் சந்தாதாரராகச் சேரும்படிச் செய்யவும்.

நமது கதைப் பக்கம்

கரிசூழ்ந்த மங்கலம், ஸ்ரீ ஆனந்தகானசபை மானேஜர்,

ஸ்ரீமான் டி. கே. ஹரிஹரபுத்ர சர்மா எழுதுவது

பணத்தால் வந்தகேடு

அல்லது

ஹரிஹரனின் ஆர்ப்பாட்டம்

அத்தியாயம்-1.

பண்ணை மகாராஜா-ஹரிஹரஜயர்

மங்கலபுரமென்பது ஒரு சிறிய கிராமம். அதில் சுமார் நூறு பிராமணர்களின் வீடுகளும், நாநூறு பிராமணரல்லாதார் வீடுகளும் உண்டு. அந்த கிராமத்திற்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் சுமார் இரண்டுமைல் தூரமிருக்கும். அந்த ஊரில் இரண்டு பிராமண பணக்காரர்கள் உண்டு. அவ்விருவரில் ஒருவர்பெயர் பண்ணை இராமநாதையர்; மற்றொருவர் பெயர் புதுப்பணம் ஹரிஹர அய்யர்; இராமநாதையர் தலைமுறை தலைமுறையாய் தனதான்ய சம்பத்தை அனுபவித்து வருகிற பண்ணையார், ஹரிஹர அய்யரோ வென்றால் தற்சமயம் நமது நாட்டில்சிற்சில சிக்கணங்களால் விலைவாசிகள் ஏற அக்காலத்தில் நெல், எள்ளு, பயறு, கடுகு, உப்பு, மிளகுவத்தல் முதலியசாமான்களை விற்று அதினால் அதிகப்பணம் சம்பாதித்து பண்ணையாரென்ற பட்டத்தைப் பெற்றவர். பணம் தன்னை யறியாமல் ஆயிரத்துக்குமேல் லக்ஷம், பத்து லக்ஷம், கோடியென குவிந்துவிட்டது. தனபாக்யம் பெற்றதின் காரணமாக தன்னை பண்ணை எஜமானென்றும், பண்ணைமகாராஜா வென்றும். தன்னுடைய சிப்பந்திக்கும், கூலிவேலைசெய்யும் ஆட்களுக்கும் உத்திரவு அளித்தார். பாவம்! கூலிவேலை செய்யும் ஆட்கள் என்ன செய்வார்கள்? இராமநாதையரைப் பண்ணை யென்று சொன்ன வாயால், இவரையும் பண்ணை மகாராஜா, என்று சொல்ல மனம் தகிக்கவில்லை, சொல்லா

விட்டாலோ பிழைப்பதற்கு வேறுவழியில்லை. "நாய்விற்றகாசு குலைக்குமா'? என்பதுபோல் பணம் ஸம்பாதித்திருக்கிற இந்த ஹரிஹர அய்யரை அவரது ஆட்கள் எல்லாரும் 'புதுப்பணம் ஹரிஹர அய்யரென்று' அழைத்தார்கள். ஹரிஹர அய்யருக்கோ தன்னைப் பண்ணை மகாராஜா, என்று சொல்லி கேட்பதில் மிகவும் சந்தோஷம் தான். எழுதும்படி தங்களில் பண்ணை ஹரிஹர அய்யரென்று போட்டு வந்தார். போஸ்டாபீஸ், தந்தி ஆபீஸ் முதலிய ஆபீஸுகளுக்கும், மற்றுமுள்ள கொடுக்கல், வாங்கல் ஸ்தலங்களுக்கும் தன்னுடைய புதுப் பெய்ரை தாக்கல் செய்து கொள்ளும்படிக்கும் கடிதங்கள் எழுதினர். சில சிநேகிதர்கள் இஷ்டப்படி 'போர்ட்டு செய்ண்டு ஜார்ஜ் கெஜட்டில்' இரண்டு, மூன்று வாரங்களில் தன்னுடைய பெயர் மாறினதைப்பற்றி பிரசுரம் செய்வித்தார். இவ்வளவும் போதாமல் சுற்று கிராமங்கள் முழுவதிலும் முரசு அறையும்படி செய்து தனது பெயரை பரவச்செய்தார்.

அத்தியாயம் - 2

பண்ணை இராமநாதையர்

ஹரிஹர அய்யர் எராளமான பணத்தை ஸம்பாதித்து வந்தார். வியாபாரமில்லாமல் அநேக ஏழை ஜனங்கள் கஷ்டப்படுவதைப்பார்த்து இதுவே நல்ல சமயமென்று எண்ணி அவர்களை அதிகமாக வருத்தி, அவர்கள் சொத்துக்களைக் குறைந்த கிரையத்திற்கு விற்கும்படி வற்புறுத்தினர். அவர்களுடைய ஆடு, மாடுகளையும், அவர்கள் ஆகாரத்திற்காக வைத்திருக்கும் நெல்லையும் ஜப்திசெய்து தன்னை கௌரவப் படுத்திக்கொண்டார். அந்த ஊர் ஜனங்களெல்லாம் அவரைப்பார்த்தால் மிகவும் நடுநடுங்குவார்கள். தனது வாழ்நாட்களை ஸிம்ஹஸ்வப்னம் கண்ட யானைபோல நடத்தலானர்கள். அவர் வெளியில் செல்லும் போது சுமார் முப்பது அல்லது நாற்பது மனிதர்கள் முன்னும், பின்னும், விலாப்புரம், இடப்புரமாக தான் நடுவிலும் அதிகாரதோரணையுடன் உல்லாசமாகச் செல்லுவார். ஆனல் பரம்பரை பண்ணையாரான இராமநாதனைக் கண்டால் வெளிப்படையாக கொஞ்சம் மரியாதையும், பயபக்தி விசுவாசமும் உண்டு. உள்ளூரார் சமயம் பார்த்து அவருக்கு ஏதாவது கெடுதி செய்யவேண்டுமென்ற எண்ணத்துடனிருந்தார்கள். ஒருநாள்பண்ணையார் இரவு போஜன முடித்துவிட்டு, தன்வீட்டுக்கொட்டகையில் போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்து

தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தார், அவருக்கு முன்பு, சில குடியானவர்கள் தங்களைப் பண்ணைக் கணக்குப் பிள்ளைகள் மிகவும் கஷ்டப்படுத்துவதாகவும், தங்களுக்கு விளைவு ஒன்றுமில்லாததினால் கட்டுக் குத்தகை நெல்லில் பாதிக்குக் குறையாமல் தள்ளிக்கொடுக்கவேண்டுமென்றும் கெஞ்சிகேட்டுக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் நமது பரம்பரை பண்ணையாரிடம் போய்ச் சொல்ல அவர் மனம் சகிக்காமல் தானே போய் பண்ணை ஹரிஹர அய்யரிடம் குடிகளின் கஷ்டத்தைச் சொல்லி அவர்களுக்கு கட்டுக் குத்தகைகளை வஜாசெய்யச் சொல்வதாய் எண்ணி அவ்விடம் வந்தார்.

அவர் வந்ததும் புது பண்ணையார் எழுந்திருந்து "அண்ணு! வாருங்கள்!" நமஸ்காரம் தயவு செய்து இந்த மெத்தைமீது உட்காருங்கள்! என்று உபசரித்தார். இருவரும் உட்கார்ந்த பிறகு குடிகள் வந்து தர்மதுரையே! நீங்கள் காப்பாத்தனம்; நாங்க எளியவங்க, உங்களைவிட்டால் வேறே எங்களுக்கு கெதி ஏது? காப்பாத்தனம், காப்பாத்தனம், என்று சொல்லி விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். உடனே வந்துவிட்டது கோபம். தனது ஆசனத்தைவிட்டெழுந்து கீழ்க்கண்டபடி பதில் சொன்னார் ஹரிஹர அய்யர்.

புது பண்ணை அய்யர்:—சீ! சீ! போக்கிறிகளா என்ன சப்தம் செய்கிறீர்கள். அடே தலையாரி! இந்த நாய்களை அப்புரம் போகச்சொல்லு, இவர்களுக்கு சமயம் தெரியாது கத்துகிறார்கள். அயோக்கியர்கள். சீ! சே! முட்டாள்கள், என்று பலவாறுகபேசி தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

இராமநாதன்:—ஹரிஹரா! என் இவர்கள் இந்த அகாலவேளையில் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பார்த்தால் கேசவபுரம் மரவர்கள்போல் தோன்றுகிறதே! (கேசவ புரம் என்பது தான் ஹரிஹரய்யர் அவர்கள் புதிதாய் வாங்கின செழிப்பான கிராமம்) (ஹரிஹர என்று கூப்பிட்ட தாத்பரியம் என்னவென்றால் நமது இராமநாதன் வீட்டில் கொஞ்சவருஷங்களுக்கு முன்பு ஹெட் குமஸ்தாவாக இருந்தபடியால் இவரை அவர்மட்டிலும் ஹரிஹரனென்று கூப்பிடுவது வழக்கம்.)

ஹரிஹர அய்யர்:—ஆ! ஆ! அவர்கள் வந்து விட்டார்களா? என்ன; நான் கேள்விப்பட்டது உண்மைதானு? இவர்கள் வந்த செய்திதானென்ன? அது விவரம் தங்களுக்கு தெரியுமா? தெரிந்தால் தாங்

கள் என்னிடத்தில் தெரிவிக்கலாமே என்று சொல்லவே பண்ணை யர் பதில் சொல்கிறார்.

இராமநாதையர்:—ஏதோ எனக்கு தெரியாததுபோல் பாவிக்குறாய், இருந்தாலும் நான் தெரிவிக்கிறேன் சற்று சவனித்துக்கேள்! அவர்கள் ஏதோ கிராமத்து விஷயமாக வந்திருக்கிறார்கள். கணக் குப் பிள்ளைக்கும், அவர்களுக்கும் சிற்சில வாதங்கள் ஏற்பட்டு அதை உன்னிடம் சொல்ல வந்திருக்கிறார்கள் போல் தோன்று கிறது. இந்த வருஷத்தில் கேசவபுரத்தில் விளைவு மிகவும் குறைவு யென்று கேள்வி! அது நிஜந்தானா? என்று சொல்லவே புது பண்ணையரான ஹரிஹர அய்யர் கீழ்கண்டபடி தன்மனதிற்குள் சிந்திக்கலானார். பண்ணை அய்யர் எத்தை உத்தேசித்து வந்திருக் கிறானோ தெரியவில்லை.

ஹரிஹர அய்யர்:—ஐயா! பண்ணையர்வாள்! நீங்கள் செய்யும் தந்திரம் எனக்குத் தெரியும். இந்தப் பயல்கள் என்னசொல்லி யிருக்கிறார் களோ தெரியவில்லை. இருந்தாலும் நமது பணம் இவரிடத்தில் கிடையாது. நாம் இந்தசமயத்தில் பயந்தால் இவர் நம்மை நசுக்க வழிதேடிவிடுவார் என்று பலவாறாக சிந்தித்து, தன்மனதை தேற்றிக்கொண்டு,வெளிப்படையாக அண்ணா! மழையும் சரியாக பெய்திருக்கிறது. நான் அதிகப்பணம் செலவுசெய்து கால்களை யெல்லாம் சரிவர பழுதுபார்த்து கொடுத்திருக்கிறேன். சில போக்கிரி பயல்கள் தங்களிடத்தில் ஏதேதோ என்னைப்பற்றி கோட்ச் சொல்லி யிருக்கிறார்கள். தங்களிடத்தில் யார் அப்படிச் சொன்னது. அவர்களை சும்மாவிடக்கூடாது. இதெல்லாம் உமக் குத் தெரியாதா?

இராமநாதையர்:— அதைக்குறித்துதான் உன்னைக்கண்டு கேட்டுவிட்டுப் போகலாமென்று வந்தேன். மேலும் ஒரு சங்கதி கேள்விப்பட் டேன்.

புதுபண்ணையார்:—(மிகவும் பரபரப்புடன்) என்ன அண்ணா! என்ன சமாசாரம்? அதை என்னிடம் சொல்லுங்களேன்.

இராமநாதையர்:— ஒன்றுமில்லை என்னருகில்வா! (காதோடு சொல்கி றார்.) கேசவபுரத்து மறவர்கள் மிகவும் போக்கிரிகள். அவர்களி டத்தில் நீ மிகவும் ஜாக்கிரதையாக நடந்துக்கொள்ளு. மேலும்

அவர்கள் சாப்பிடுவதற்கு வகையில்லாமல் ஊர் ஊராய்ச்சென்று கொள்ளை அடிக்கிறார்கள் என்றபேச்சும் என் காதில் விழுந்தன. ஜாக்கிறதையாகப் பார்த்துக்கொள். நான்போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு தனது வீட்டுக்குச் சென்றார்.

இதைக்கேட்டதும் புதுப் பண்ணை அய்யருக்கு அடங்காத வருத்தம் உண்டாயிற்று. ஒருநாளும் வராத இவர் நம்முடைய வீட்டிற்கு வந்து நம்மை எச்சரித்து விட்டுபோனதன் உண்மை இன்னதென்று தெரியவில்லையே என்று மிகவும் வருத்தத்துடன் இருந்தார். குடியானவர்களோ பண்ணை அய்யர் நமது விஷயத்தில் ஒன்றும் இடம்கொடுத்து பேசவில்லை என்ற ஸமாசாரத்தையும் தெரிந்துக் கொண்டார்கள். உடனே குடியானவர்கள். நமது புது பண்ணையாரிடம் விடைபெற்றுக் கொண்டு பழைய பண்ணையாரான இராமநாதையரிடம் செலவுக்கு பணம் வாங்கிக்கொண்டு ஊருக்குப் போவதாகச் சொல்லிப் போனார்கள். இராமநாத அய்யர் தன்னாலானதைச் செய்தாய் விட்டதென்று எண்ணி யாருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. தூக்கம்பிடிக்காமல் படுத்தப் படுக்கையிலே எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினார். குடிகள் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஊருக்கு வெளியில்வந்து யோசிக்கலானார்கள்.

(தொடரும்)

இளைஞர்கட்கு உபதேசம்

திருவாரூர். கே. கோவிந்தராஜன் எழுதுவது.

(ஆசிரியர் வாஸ்வானி)

யுவர்களே! நீங்கள் கிளர்ச்சியில் உயர்வையடைந்திருக்கிறீர்கள். ஆனால் கிளர்ச்சி மாத்திரம் போதுமானதாகாது. சக்தி (பலம்) தான் முக்கியமானதாகும். என்செய்தி உங்களுக்கு யாதென்றால், எழுங்கள், உழையுங்கள், என்பதே. பலதிறப்பட்டதீர்மானங்களில் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு பெரிய ஏற்பாடுகளிலும் நம்பிக்கை யில்லை. நான் சிக்கனத்திற்காக விவாதிப்பேன். செயலில் செய்வதற்கு ஏற்றதான ஏற்

பாடுகளுக்கு அவைகளே முக்கியமான தாகும். யுவர்களே! நான் உங்களைக் கேட்டுக்கொள்வது யாதெனின் சமுகங்கள் என்பது பேச்சுகளாலும், காகிதத் தீர்மானங்களாலும் செய்யப்பட்ட தானவையாகுமென்பதையும் மனதில் வையுங்கள் என்பதே! ஜப்பானிய அரசியல் வாதி ஒருவர் சொல்லியதாவது, இந்தியர்கள் அநேக நல்ல ஒழுக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் ஓர்பெரியகுறை இருக்கிறது. அதாவது அவர்கள் அதிகமாகப் பேசவிரும்புவதே. உத்வேகமான செயலை செய்யவல்ல உயர்ந்த ஒழுக்கத்திற்கான நெறிகளைப் பண்படுத்துங்கள் என்று நான்உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒருதினம் இந்ததேசமானது தீயினால் அழிக்கப்படப் போகிறதென்பதை நான் அறிகிறேன். என்பிரார்த்தனையாவது அந்ததினம் வருவதற்குமுன் ஒவ்வொரு மாகாணத்திலும் உறுதியோடு கூடியசெயலை சாதிக்க வல்லவர்களும், அமைதியான வாழ்வை பலத்தோடும் நடத்தவல்லவர்களுமான ஒரு கூட்ட யுவர்களைக் காணலாமென்பதே, சமயத்தின் மேல்பாகத்தில் இருள் சூழ்ந்து நிற்கின்றது, ஆனால், அவ்விருளில் நட்சத்திரங்கள் பிரகாசிப்பதை நான்காண்கிறேன். யுவர்களே! நம்பிக்கையுள்ள நட்சத்திரங்களாக மிளிர்கின்றார்கள். சமுகத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கும், அதை பலப்படுத்துவதற்கும் யுவர்கள் ஏற்றவர்களாகும்படி கடவுள் அனுக்கிரஹிப்பாராக! புராதன காலத்தில் ஆச்ரமங்களில் ரிஷிகள் உபதேசித்ததாவது, "எழுங்கள்! உழையுங்கள்! என்பதாகும். அந்தப் புராதன உபதேசத்தையே நானும் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். உண்மை உழைப்பின் தன்மையை அறிவது எங்ஙனம்? வாழ்வு காலத்தில் பிரசங்கங்கள் செய்வதினாலு மாகாது. உழையுங்கள் என்றே யுவர்களுக்குச் சொல்லுகிறேன். அமைதியான வாழ்வின் உறுதிக்கு உழையுங்கள்! உழையுங்கள்! கடந்து சென்ற புராதன பலத்தைப் பார்க்கினும் சமயம் வருங்காலத்திலும் உறுதி மிக்கதான விளங்குவதற்கு இந்திய யுவர்களே! உழையுங்கள்!

நீதிவாசகம்

புறத்தூய்மையும், அகத்தூய்மையும், விடியற்காலையில் ஸ்நானஞ் செய்தலும், சாதாரண உணவை உட்கொள்ளுதலும், வீட்டுக்குள் அடைத்துக்கொண்டிராமல் நல்ல காற்றுற்றுள்ள இடத்திற்கு அடிக்கடி செல்லுதலும், சீக்கிரம் படுக்கைக்குச் சென்று வைகறையில் துயிலெழுதலும் ஆரோக்கியத் தந்திரம்.

(டாக்டர்-முத்துலக்ஷ்மி)

சிவபதி பதிகம்

சென்னை தொண்டை மண்டலம் துளுவவேளாளர் கலாசாலை
தமிழ்க்கழக கௌரவ காரியதரிசி
திரு. வ. ஏகாம்பரன் எழுதுவது

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

1 கருதரிய பரம்பொருளே! கருத்ததனுட் கலந்த
கருத்தேயென் கண்ணேயக் கண்ணிலுறு மொளியே!
அருள்பயக்கும் செழுங்கனியே! அடியார்கட் ககமே!
அவ்வகமே குடிலென்று அமர்ந்திருக்கும் அமரே!
பெருமைவளர் முச்சுடரும் பிறங்குமுக முடையாய்!
பெருகிவருங் கடல்தன்னை பசியகன்னர் உரித்துள்
ஒருமையுடன் அடைக்குமெறும் உடையோய்நல் லவையில்
உகந்துநடம் புரிந்தருளும் ஒளிருசிவ பதியே!.

2 திருநீறு ஒளிருமெழில் சிவந்தநறுங் கனியே!
திருமாலுஞ் சென்றுணராத் திருச்சோதி மயமே!
கருணைமலர் மலர்ந்தருளும் கடிமலர்நற் றடமே!
கருணீக்கும் அவிர்ஞான ஒளிமிகுந்த ஒளியே!
அருமைமிகு அடியவர்கள் விழைந்தருளும் விழைவே!
அவர்கட்குப் பொருளனைத்தும் பொருத்தியிடும் பொருளோ
அருள்நிறைந்த வாருதியே! அழகியபே ரவையில்
அகங்குளிர நடம்பயிலும் ஆர்ந்தசிவ பதியே!.

2 உருவிளங்கு மெழிற்சுடரே! உயர்ஞானக் கொழுந்தே!
உன்மாத ஆணவத்தை ஒழித்தாளும் குருவே!
பெருமைதிகழ் வானவரைக் காத்தருளும் இறையே!
பெற்றத்தின் மேலமர்ந்து பீடுபெற விளங்கும்

பெருங்கருணை வடிவாகிப் பிறங்குமுயர் குன்றே!
பெட்போங்கு மடியவர்கட் குதவுகின்ற தருவே!
குருவிலங்கு திருமன்றில் கொங்குமலர் சிதறக்
குலவிநடம் புரிந்தருளும் கொற்றசிவ பதியே!

4 பொருவில்லாத் தனிப்பொருளாய்ப் பொலிந்தோங்கும் பொரு
பூரணமாய் எங்குநிறை பெருங்கருணைக் கடலே! [ளே!
மருமிகுந்த மலர்பொதிந்த மணிமாலை யிலங்க
மாமேரு மகள்மகிழ மருங்கமர்ந்த அரசே!
தெருளினுளே தெருளாகிச் சிந்திப்பார் மனத்தில்
தேசிகனாய் நின்றுண்மை தெரியவருள் பரனே!
பருமித்த பேரவையில் பாரிலுளோர் துதிக்கப்
பரிவுடனே நிருத்தமிடு பரமசிவ பதியே!.

5 முருகுடைய கடம்பணிந்த முருகனைமுன் ஈன்ற
முன்னவனே! மறைமுடியில் நின்றொளிரும் மூர்த்தி!
திருவுடைய நறுங்கொன்றை திகழ்ந்தொளிரும் புயத்தோய்!
திரிபுரங்கள் சுட்டெரித்த திருநாட்ட முடையாய்!
கருளுடைய மாயையற உதித்தெழுந்த ஒளியே!
கறைமிடற்றாய் திருகழற்கின்ற கவின்மிகுந்த கவினே!
தருவுடைய பொழில்சூழ்ந்த தனிமன்றில் தனியே!
தாண்டவஞ்செய் திருமிகுந்த தனித்தசிவ பதியே!.

6 அருள்கனிந்த கனிச்சுவையே! ஆரமிர்தே கரும்பே!
ஆருயிர்க்கோ ரருமருந்தே! ஆனந்த வடிவே!
மருள்நிறைந்த மக்கடமை மாசகற்று மறிவே!
மாமேரு வில்லாக வளைத்தபெரும் வலியோய்!
அருவாகி யுருவாகி அகிலாண்ட கோடி
ஆர்ந்தவுயிர் களுமாகி யமர்ந்தபெரும் பொருளே!
திருமகட்கு உறைவிடம்போல் திகழுகின்ற வவையில்
திருநடனம் புரிந்தருளும் தேவசிவ பதியே!.

7 திருவடியே! நினைப்பவர்க்குச் சீர்மிகவே யளித்துத்
தேவரினு மவரோங்கச் செய்தருளு மிறையே!
மருவினிய கிளைகளெனு மாவடியார் குழுவை
மாதலத்தில் அடிமைகொள வந்தருளும் அருளே!

விருடமதி லூர்ந்துவரும் வித்தகனே! நால்வர்
விளம்பியமா தமிழ்மறைகள் விரும்புகின்ற மேலோய்!
வருமுயர்ந்த மெய்ஞ்ஞானம் வயங்குகின்ற வடிவே!
வளமைமிகு மன்றில்நட மாடுசிவ பதியே!.

8 அருமறைகள் தேர்ந்துரைக்கும் ஆரணத்துட் பொருளே!
அருளருவி வழிந்தொழுகும் அழகியபொற் குன்றே!
இருநான்கு குணந்திகழும் எங்கள்சிவக் கொழுந்தே!
இனியநறும் சுவைக்கரும்பே! இருணிறைந்த மனமாம்
கருங்கலினை யுருக்குகின்ற கருணைமிகு சுடரே!
கருந்தனம்போல் திகழ்மென்றன் கண்ணே! கண்ணிலுறு
கருமணியே! காணரும்நற் கலையுணர்த்தும் குருவே!
கனகசபை தனில்நிருத்தம் காட்டுசிவ பதியே!.

9 அருங்கலைகள் பயில்பவர்க்கு அரியசுவை பயக்கும்
ஆரமுதே! அன்னையினும் பரிந்துதவும் பரியே!
தெருள்நிறைந்த மறையமுதம் தெரிகின்ற தெளிவே!
தேடரிய செழும்பொருளே! தித்திக்கும் சுவையே!
துருவமுள பசுங்கனியே! திருஞானச் சுடரே!
சுத்தசிவ மயமாகிச் சுகமளிக்கும் சுகமே!
வெருள்நிறைந்த மேதினியில் மேவடியார் மகிழ
விரும்பநடம் புரிந்தருளும் விமலசிவ பதியே!:

10 பெருங்கருணை வாரிதியே! பெரியோர்கள் வணங்கும்
பெம்மானே! யெங்கணுநற் பீடுறவே விளங்கும்
பெருந்தகையே! பிறையோங்கு சடைதாழு கின்ற
பிஞ்ஞகனே! பொன்றுறு பிறங்குபழக் குலையே!
தருநிதியக் குன்றளிக்கும் தனித்தபரம் பொருளே!
சங்கரனே! கொன்றைமலர்த் தாரணிந்த தருவே!
விரும்புமுயர் சதுர்வேத முடியினிலே விளங்கி
மேதினியோர் உய்யநட மியற்றுசிவ பதியே!.

வரப்பெற்றேம்:—சிற்றின்பவெற்றி, ரோஜாதேவி, பெண்புத்தி பிரகாசிகை, தமிழின் தற்கால நிலைமை, ஞான இரகசிய சிந்தாமணி, ஆகிய புத்தகங்களும், அருணோதயம், தெய்வீகன், விடுதலை ஆகிய பத்திரிகைகளும் நம் பார்வைக்கு வரப்பெற்றேம். இவைகளைப் பற்றிய மதிப்புரை அடுத்தமாதம் எழுதப்படும்.

பத்திரிகாசிரியர்.

தேச பக்தர்களின் திருவாக்கு

1 அரசாங்கம் பொறுப்புற்ற தன்மையிலிருக்கிற வரையிலும், அது போலீசையும், ராணுவத்தையும் வைத்துக்கொண்டுதான் அரசாளும்.

லாலாஜியை அடித்த அடி பொறுப்பற்ற அரசாங்கத்தின் செய்கையேயாகும்.

அன்னிய ஆட்சியை ஒழிப்பதற்கான வழிகளை நான் இப்பொழுது விவாதிக்கவில்லை. என் வழியாவருக்கும் தெரிந்ததே. ஏதாவதொரு வழியைத் தேடுவதில் உடனே கவனத்தைச் செலுத்தும்படி நான் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மகாத்மா காந்தி)

2 தேசத்தொண்டு தெய்வீகத் தொண்டாகும். சகல தொண்டுகளையும்விட தேசத்தொண்டே மிகச் சிறந்தது.

(தேசபந்துதாஸ்)

3 பரிபூரண சுயராஜ்யத் தீர்மானத்தினின்றும் இனிமேல் பின் வாங்குவது கூடாது. நாள் ஆக ஆக எனக்கு பரிபூரண சுயராஜ்யத்தில் அதிக உறுதியும், நம்பிக்கையும் ஏற்பட்டு வருகின்றது.

(சீனிவாசய்யங்கார்)

4 இந்தியாவின் வறுமைப் பிணியை நீக்கவல்லது காந்திமகான் கண்ட கைராட்டினமே.

கோரமான ஓர் குழந்தை நமக்குப் பிறக்குமானால் அதை நாம் தள்ளிவிடுவதில்லை. அஃதே போன்று நம்நாட்டில் உற்பத்தி செய்யப் படும் கதர் கரடு முரடா யிருக்கிறதெனக் கூறி நாம் தள்ளி விடுதல் கூடாது.

(சி. துரைசாமி ஐயங்கார்)

5 லட்சுமணபுரி மகாநாட்டுக்குப் பின்னர் நாட்டிலே ஏற்பட்டிருக்கும் ராஜிய ஒற்றுமையை எந்த தேசாபிமானியும் அழிக்க முற்பட மாட்டான்.

(சேன்குப்தா)

தேசத்தின் கதிமோட்சம் இளைஞரின் வசந்தானிருக்கிறது. ஆதலால், அவர்கள் தைரியத்துடன் தேச விமோசனத்திற்குப் பாடுபடல் வேண்டும்.

(டாக்டர்-பேஸண்டு.)

லாலாஜியின் மார்புமீது விழுந்த அடி நம்மீது விழுந்ததாகும். இதற்குப் பிறகாவது அடிமைச் சங்கிலியை அறுத்தெறிய முற்பட வேண்டும்.

(ஸ்ரீபுலுசு சாம்பமூர்த்தி.)

விகடத் துணுக்கு

ஒரு சோதிடன் ஒரு வாலிபனை நோக்கி, "எனக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் உன் வாழ்நாட்களில் நடந்ததையும், இனிமேல் உன் ஆயுளில் நடக்கப் போவதையும் கூறுவேன்" என்றான்.

வாலிபன்;— (நகைத்து) இவ்வளவுதானா! நீ எனக்கு இரண்டணா கொடுத்தால் நீ இறந்துவிட்ட பின்னும் உனக்கு என்னென்ன நடக்குமென்பதையும் நான் கூறுவேன் என்றான்.

சோதிடன்;—அதிசயித்து அப்படியா? கூறு பார்ப்போம்! என்றான்.

வாலிபன்:— கூறுகிறேன்; கவனமாய்க் கேள்! நீ இறந்துவிட்டபின் உன்னை நீட்டிவைத்து, உற்றார், பெற்றார் மேல்விழுந்து கழுவி குளிப்பாட்டி உன்னை பாடைமீதேற்றி, சுடுகாட்டுக் கொடுத்துச் சென்று, கட்டை வரட்டிமீதடுக்கி நெருப்பிட்டுக் கொளுத்தி சாம்பலாக்குவார்கள் என்றான்.

சோதிடன்:—நன்றாய் சொன்னாய் (என்று சிரித்துக்கொண்டிருக்கையில்)

வாலிபன்:—இரு! இரு!! என் சோதிடம் இன்னும் முடியவில்லை. சாம்பலாக்கினபின் சடங்குகளை முடித்து உன்னை பெரியோர்களில் சேர்த்து விடுவார்கள் என்றான்.

சோதிடன்:—அவமானமடைந்து குலுங்கக் குலுங்க நகைத்துச் சென்றான்.

ஒருவரின் மனைவி சென்ற இடம் தெரியவில்லை. அவர் உடனே பத்திரிகைகளில் பின் வருமாறு விளம்பரஞ் செய்தார்:—

அதாவது, "என்மனைவியை சென்ற இரண்டு தினங்களாகக் காணவில்லை. அவள் நல்ல சிகப்பு. உயரம் 5-3. அடி; யாராவது எங்காவது சந்திக்க நேரிட்டால் அவளை வைத்துக்கொண்டிருந்து எனக்கு அறிவிக்கவும்.

* * * *

சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் ஒருவர்மேல் ஒருவர் ஆத்திரம் கொண்டிருந்தார்கள். ஒருவன் கடியாரம் திருடி சிக்ஷை யடைந்திருந்தான். மற்றவன் மாடு திருடினவன். ஒருநாள் மாடு திருடினவன் கடியாரம் திருடினவனைப் பார்த்து மணி யென்ன என்று கேட்டான். கடியாரத்திருடன், பால் கரக்கிறவேளை என்றான்.

(சு-யா)

கடிதங்கள்

கனம் "விவேகபாநு" ஆசிரியரவர்கட்கு

—(*)—

அன்புமிக்க ஐயா!

தாங்கள் விருப்பொடு விடுத்த "விவேகபாநு"வின் முதல் ஆறு இதழ்களும்வரப்பெற்றோம். மிரம்ப ஆனந்தம். இப்புதுத் திக்கலேட்டின் உள்ளுறைகள் பொன்னேபோல் போற்றுதற்குரியனவா யிருக்கின்றன. காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கக் கட்டுரைகள் இதன்பால் வெளி வருவது பாராட்டற்பாலது. எளிய, இனிய நடையில் அரியபெரிய விஷயங்களையுடைய இச்சஞ்சிகையை வாசிக்கும் ஆண், பெண் இருபாலரும் பயனடையத் தவறா ரென்பது எங்கள் துணிபு.

இங்ஙனம்,

தங்கள் நன்றி என்றும் மறவாத,

ஸ்ரீ நடராஜசபை
வண்ணாரப்பேட்டை, 24-11-28.

பா. பக்கிரிசாமி செட்டியார்.
எம். சண்முக முதலியார்.
காரியதரிசிகள்.

"விவேகபாநு" ஆசிரியர் அவர்கட்கு

அன்புமிக்குற்ற ஐயா!

தங்களால் வெளியிடப்பெறும் "விவேகபாநு" என்னும் பெயரினைப்பூண்ட, மாதசஞ்சிகையின் பிரதிகள் கடந்த ஆறுமாதகாலங்களாக வரப்பெற்றோம். இவ்வரிய மாதசஞ்சிகை, பலகலை ஆராய்ச்சி சம்பந்தமாயும், விவேகம் வளரும் பல அரிய கட்டுரைகளையும், கற்பனைக் கதைகளையும், தன்னகத்தே தாங்கி நிற்கின்றது. இதன் பெயருக்கேற்ப இதிலடங்கியுள்ள விஷயங்கள் அவிவேகத்தை யோட்டி விவேகத்தை வளர்க்கச்செய்யுமென்பதிலையமில்லை. இதில் பெண்கள் முன்னேற்றத்திற்கான கட்டுரைகள் மிளிர்வது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய செந்தமிழ்நடையில் எழுதப்பட்ட தங்கள் "பாநு" மென்மேலும் விருத்தியடைந்து நம்நாட்டுக்கு ஒப்பற்ற தொண்டாற்றி வருவான் வேண்டி தங்களுக்கு நீண்ட ஆயுளையும், சிறந்த தேசபக்தியையும், தந்தாண்டருள எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

S. R. ஆத்மராம் அமைச்சன்
(கலைமகள் கழகம்)
35, கிருஷ்ணப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

சென்னை
25—11—28

"விவேகபாநு" பஞ்சாங்கம்

விபவஹு மார்கழிமீ

கலியுகாதி—5030; சாலிவாகன—1851;
பசலி - 1338; ஹிஜிரி - 1348; கொல்லம்-1104.

இங்கிலீஷ் 1928—29ஹு டிசம்பர்—ஜனவரிமீ

	குரு	ராகு	செ
	15-ம-பு 18 கும்-சு		
சுக்			
சூரி புத	சனி கே		

தமிழ் தேதி	இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	15	சனி	திரு 21-27	உத்ரா 39-41	தனுர்பூசை ஆரம்பம்
2	16	ஞாயி	சவு 24-11	திரு 42-23	ருதுசாந்தி செய்ய
3	17	திங்கள்	பஞ் 25-13	அவி 46-23	விருந்துண்ண
4	18	செவ்	சஷ் 25-45	சத 46-46	கிழக்கில் பிரயாணம்
5	19	புதன்	சப் 24-43	பூர 46-44	மந்திரோபதேசம் பெற
6	(டிசம்பர்மீ) 20	வியா	அஷ் 22-29	உத்தி 45-14	கரிநாள்
7	21	வெள்	நவ 19-11	ரேவ 43-33	வியாபாரம்செய்ய
8	22	சனி	தச 14-57	அசு 40-29	வாகனங்கள் வாங்க
9	23	ஞாயி	ஏகா 10-5	பர 37-6	வைகுண்ட ஏகாதசி
10	24	திங்க	துவா 4-39	* கிரு 33-23	துவாதசி விரதம்
11	25	செவ்	திர 53-0	ரோ 29-6	சுபகாரியம் நீக்க
12	26	புதன்	○பௌ 47-10	மிரு 25-11	பௌர்ணமி
13	27	வியா	பிர 41-48	திரு 21-16	ஆருத்ராதரிசனம்
14	28	வெள்	துதி 36-49	பூச 14-36	சீதாரம்பம்செய்ய
15	29	சனி	திரு 32-19	ஆயி 12-46	ஆடிகெர்ப்போட்டம்
16	30	ஞாயி	சவு 28-53	மகம் 11-32	ஜெபம்செய்ய
17	31	திங்	பஞ் 25-49	பூரம் 11-39	ஆவணிகெர்ப்போட்டம்
18	1	செவ்	சஷ் 24-56	உத்ர 21-21	நவக்கிரஹ சாந்தி செய்ய
19	2	புதன்	சப் 25-11	அஸ் 14-21	கெர்ப்பாதானம்
20	3	வியா	அஷ் 26-21	சித் 17-21	கர்ணபூஷணஞ்செய்ய
21	4	வெள்	நவ 28-54	சுவா 22-14	சீமந்தம், பூமுடித்தல்
22	5	சனி	தச 32-3	சுவா 23-12	சோதிடம்படிக்க
23	6	ஞாயி	ஏகா 36-29	விசா 28-11	யோகசாதனை செய்ய
24	(1929ஹு ஜனவரிமீ) 7	திங்க	துவா 41-4	அனு 34-13	கார்த்திகைகெர்ப்போட்டம்
25	8	செவ்	திர 46-21	கேட் 40-51	நந்தவனம் வைக்க
26	9	புதன்	சது 51-57	மூல 47-27	மார்கழிகெர்ப்போட்டம்
27	10	வியா	(ஹு) அமா 55-59	பூரா 53-12	அமாவாசை
28	11	வெள்	பிர 59-42	உத்ரா 58-13	கெர்ப்போட்ட நிவர்த்தி
29	12	சனி	துதி 69-2	திரு 60-0	போகிப்பண்டிகை

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,
20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS.
Editor—S. K. GOVINDASWAMY PILLAI.